# சென்னை வியாபாரி

என்கிற

# தென்னிந்தியா வர்த்தக ஜர்னல்

புஸ்தகம் 1. Vol. 1. | பிரமாதீச ௵ தைமீ — 1914௵ ஜனவரிமீ | ஸஞ்சிகை 9. No. 9.


REGISTERED 21 FEB 1914 REGISTRAR OF BOOKS, MADRAS

## BANK FAILURES.

## பாங்கி முறிவுகள்.

வட இந்தியாவில் அனேக பாங்குகள் முறிந்துபோய் விட்டனவென்றும் ஆகையால் தேச முழுதிலும் பணக்கசாலா உண்டாயிருக்கிறதென்றும் முந்தியமாத நம் "சென்னை வியாபாரி"யில் சொல்லியிருந்தது நம்நேயர்களுக்கு ஞாபகமிருக்குமென்று நம்புகின்றோம். பாங்கு முறிவுகள் இம்மட்டில் நிற்காமல் இம்மாதத்தில் வெகுகாலமாக ஒழுங்காக நடத்தப்பட்டுவந்த ராஜபுதனபாங்கும் அதனுடைய கிளைபாங்குகளும் கதவை மூடிப்போட்டனவென்று தந்தி சமாசாரம் நமக்கு எட்டியிருக்கிறது. பாங்கு முறிவுகள் இந்தியாவுடன் நிற்காமல் சியம் தேசத்தையும் எட்டிப் பார்த்திருக்கிறது! ஏன் எனில் சியம் தேசத்திலுள்ள பாங் ஹாக் பாங்கும் கதவை மூடிப்போட்டது. இப்பாங்கு முறிவுகளில் என்ன ஆச்சரியமென்றால் முறிந்துபோன பாங்குகள் ஒவ்வொன்றும் "சுதேசிய" பாங்கியாயிருக்கிறது. நம்இந்தியாவில் ஐக்கிய முயற்சி சங்கங்கள் 6000ம் இருந்தும், இவைகளில் எந்த சங்கத்திலாவது போட்டு முடக்கப்பட்ட பணம் மோசம் போய்விட்டதென்று நாம் கேள்விப்பட்டதில்லை. சுதேசிய பாங்குகள் முறிந்து போயிருப்பதற்கும் ஐக்கிய முயற்சி சங்கங்கள் முறிந்து போகாமல் தினே தினே வளர்பிறைச் சந்திரன்போல வளர்ந்து கொண்டிருப்பதற்கும் காரணங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஐக்கிய முயற்சி சங்கங்கள் கவர்ன்மெண்டாருடைய நுட்பமான பார்வையில் நடைபெற்று வருகின்றன. பாங்கிகளையும் மற்றபடி இத்தேசத்தில் ஆரம்பிக்கப்படும் ஒவ்வொரு முயற்சியையும் கவர்ன்மெண்டார் கலந்து கொண்டு நேரே மானேஜ்மெண்டு செய்வதென்றால் சாத்தியமாகாத காரியம். ஆதலால் பாங்குகளில் பணம்போட்டு முடக்கும் பங்குதார்களும் டைரக்ட்டர்களும், மானேஜர்களும், டிபாசிட்டர்களும் தங்களுடைய உத்திரவாதங்களையும், கடமைகளையும், பாத்திதைகளையும் உணர்ந்து பாங்கிகளை நடத்திக் கொண்டு வந்திருந்தால் இந்த பாங்கு-முறிவு சம்பவம் சம்பவித்திருக்கமாட்டாது அனேக ஜனங்கள் நொந்து போய் ஒட்டாண்டிகளாகவும் போயிருக்கமாட்டார்கள். முறிந்துபோன பாங்குகளின் சமாசாரங்களை விசாரணை செய்யப்புகின் விரும்பத்தகாத சமாசாரங்கள் காதில் படுகின்றன. சில பாங்குகளில் லிக்விடேட்டர்கள் மானேஜ்மெண்டுசெய்து வந்தவர்களை கிரிமினல் தரப்பில் பிராசிக்யூட் செய்துவருகிறார்கள். கராச்சியில் கூ

டியகைத்தொழில்கான்பரன்சிற்குசபாநாயகரா கயிருந்தமிஸ்டர் லல்லுபாய் சாமல்தாஸ் பாங்கு முறிவுகளைப்பற்றி சொல்லியிருக்கும் அருமை யான வாக்கியங்களை நாம் இவ்விடத்தில் எடுத் தெழுத மறந்துபோகக்கூடாது.

"பங்குதார்கள் தங்களுடைய உண்மையான உரிமை களையும் பாத்தியதைகளையும் அறிந்து கொள்ளாமல் அதிகப்படியான டிவிடெண்டுகளுக்கு ஆசைப்படும் பரியந்தமும் டிபாசிட்டர்கள் பாங்கிகளின் யோக்கி யதையையும் அந்தஸ்தையும் அறிந்து கொள்ளாமல் ஜாஸ்திவட்டிக்கு இச்சித்துப் பணத்தைப் போட்டு முடக்கும் பரியந்தமும் பாங்கியின் மானேஜர்கள் பங்குதார்களின் பாத்திதைகளை அலக்ஷியப்படுத்தி பெரிய ஆசைபிடித்து பங்குதார்களின் பணத்தை எல்லாம் சாவதானமற்ற தொழிற்களில்போட்டு முட க்கும் பரியந்தமும் பாங்குகள் ஓயாமல் முறிந்துகொ ண்டிருக்கு மென்றும் எங்குபார்த்தாலும் துன்பத்தை விளைவித்துக்கொண்டே யிருக்குமென்றும்" சொன் னார்.

ஆகவே தற்காலம் பாங்கு முறிவு சம்பவத் திற்கு பங்குதார்களுடைய அஜாக்கிரதையே காரணம் என்று எண்ணப்பட்டு வருகிறது. மேன்மைதங்கிய வைசிராயும் சென்னையில் பேசும்போது இப்பாங்குமுறிவு சம்பவம் ஒழுங் காக நடத்தப்பட்டு வரும் பாங்குகளில் பணத் தைப் போடும்படி ஜனங்களுக்கு எச்சரிக்கிற தாக எண்ணப்படவேண்டுமென்று சொன்னார் கள்.

## P. & O. MAIL SERVICE.
## சீமைத் தபால்.

இந்தியத் தபால்களை இங்கிலாண்டுக்குக் கொண்டுபோகும் "பி அண்டு ஓ" என்கிற ஸ்டீமர் கம்பெனியாருடன் இங்கிலாண்டு போஸ்ட்மாஸ்டர் செய்துகொண்டிருக்கும் ஒப் பந்தம் 1914-ம் வருஷம் டிசம்பர் மாதத் துடன் முடிவடைகிறதென்றும், ஆகவே புதிய ஒப்பந்தம் பிறப்பதற்குமுந்தி மேற்படி ஒப்பந்தத்தில் ஏதேனும் மாறுபாடுகளசெய்யப் படவேண்டுமோ என்று இந்தியாவிலுள்ள வர்த்தகச் சேம்பர்கள், சங்கங்கள் முதலான வைகள் அவைகளுடைய அபிப்பிராயத்தைக் அறிவிக்கும்படியாக இந்தியா கவர்ன்மெண் டார் எழுதிக் கேட்டிருந்தார்கள் என்று முன் ஒரு சமயம் நம் "சென்னை வியாபாரியில்" எழுதியிருந்தோம். இது விஷயமாக நிகழ் மாதம் கூடின வைஸிராய் சட்ட சபையில் பிரஸ்தாபம் நடந்து இன்னும் ஒரு வருடம் வரையில் மேற்படி ஒப்பந்தகாலம் ஆக்கர் அதாவது 1915-ம் வருஷம் டிசம்பர் மாதம் வரையில் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. ஏ னெனில் இந்தியாவிலுள்ள சில சேம்பர்களும் வர்த்தக சங்கங்களும் வாரத்திற்கு ஒரு முறை இந்தியாவிற்கும் இங்கிலாண்டிற்கும் தபால் போக்குவரத்து செய்யப்படுவது வாரத் திற்கு இருமுறையாக விருந்தால் நலமாயிரு க்குமென்று அபிப்பிராயப்பட்டன. மேலும் ஸ்டீமர் ஓட்டத்தின் வேகத்தையும் அதிகப் படுத்தவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டா ர்கள். இந்த ஏற்பாடுகளெல்லாம் செய்வதென் றால் இந்தியா தற்காலம் தாங்கமுடியாத செ லவை பொறுத்துக்கொள்ள வேண்டியதாக யிருக்கிறது. சீமைத் தபாலை இந்தியாவிற்கும் இந்தியத் தபால்களை சீமைக்கும்.............. ..............குறிப்பிட்ட சரியான காலத்தில் கொண்டுவந்து சேர்ப்பதில் பி அண்டு ஓ, ஸ்டீ மர் கம்பெனியார் கீர்த்திப்பெயரை ஸ்தாபித் திருக்கிறார்கள். ஒப்பந்தம் முடியும் ஒவ்வொரு தடவையிலும், கவர்ன்மெண்டார் ஒப்பந்தம் விடப்போகிறதை விளம்பரங்கள் மூலியமாக பயிரங்கப்படுத்தினபோதெல்லாம், பி அண்டு ஓ கம்பெனியாரே முன்னுக்கு வந்து ஒப்பந் தத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சீமைத் தபால் ஸ்டீமர் வெள்ளிக்கிழமை இரவு லண்

டனைவிட்டுப் புறப்பட்டு 13 நாட்களில் பம்பாய் துறைமுகத்தையும் இன்னும் 40 மணி நேரத்தில் கல்கட்டா துறைமுகத்தையும் பிடிக்கிறது. இந்தியாவிலிருந்து சீமைக் குபுறப்படும் தபால் ஸ்டீமர் கல்கத்தாவை விட்டு வியாழக்கிழமையும் பம்பாயைவிட்டுசனிக்கிழமையுமாகிலும் புறப்பட்டுமுறையே 14,16 நாட்களுடைடத்தில் லண்டனைப் பிடிக்கிறது. தற்காலம் ஊர்ச்சிதத்திலிருக்கும் ஒப்பந்தப் பிரகாரம் 305000 பவுன் ஸ்டீமர் கம்பெனியார் கவர்ன்மெண்டாரிடமிருந்து வாங்கிக்கொண்டு வருகிறார்கள். இதற்கு முந்திய ஒப்பந்தப்படி 350,000 பவுன்கள்தான் வாங்கிக்கொண்டு வந்தார்கள். ஆகவே தபால் இலாக்காவிற்கு வருடத்திற்கு 45 ஆயிரம் பவுன் ஆதாயப்படுகிறது. சீமைக்குப் போக்குவரத்தாகும் கடிதங்களும் பார்சல்களும் முந்திக்கெப்போது இரட்டிப்பு மடங்கு அதிகமாகயிருக்கின்றனவென்றும் வாரம் இருமுறை தபால் ஸ்டீமர் போக்குவரத்து செய்யப்பட்டால் வர்த்தக வகுப்பாருக்கு அநுகூலமாகயிருக்குமென்றும் ஆனரெபில் மிஸ்டர் கிளார்க் போலொத்த கவர்ன்மெண்டு மெம்பர்கள் அபிப்பிராயப்பட்டபோதிலும், செலவை உத்தேசித்துப் பார்க்குமளவில் தற்காலம் இந்தச்செலவை இந்தியா ஏற்றுக்கொள்ளும்படியான நிலைமையிலில்லையென்றும் எண்ணி சீமைத் தபால் வாரம் இருமுறை போக்குவரத்து செய்யப்படும்படியான யோஜனைத் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

---

162037

# TRADE.
## வியாபாரம்.

### Another Bank Smash.
### இன்னொரு பாங்க் முறிவு.

இராஜபுதன பாங்கும் சாக்கூரிலிருக்கும் அதன் கிளையும் ஒரு வாரத்திற்கு முந்தி கதவுகளை மூடிப்போட்டன. ஆனால் இப்பாங்கி முறிவடைந்த மற்ற பாங்குகளைப்போல அவ்வளவு கேவலமான நிலைமையிலில்லை என்றும் நல்ல ஸ்திதியிலிருக்கிற தென்றும் வட இந்தியாவில் நேரிட்டிருக்கும் பாங்கு முறிவால் பணக்கசாலாவாக யிருப்பதை முன்னிட்டு பாங்குக்கு வரவேண்டிய கடனை வசூல் செய்ய சாத்தியப்படாம லிருக்கிற தென்றும் ஆதலால் கதவுகள் தற்காலம் சாத்தப்பட்டன வென்றும் ஷை பாங்கின் மானேஜிங் டைரக்டர் அறிவிக்கிறார்.

---

### Gold Mine Disaster.
### பொன் சுரங்கத்தில் உண்டான சேதம்.

கோலார் "சாம்பியன் ரீப்" என்று சொல்லும்படியான பொன்சுரங்கத்தில் சுரங்கத்திற்குள் இறக்கும் கயிறு அறுத்துக்கொண்டு கயிறு நுனியில் கட்டியிருந்த தொட்டில் 1500 அடி ஆழத்தில் விழுந்துவிட்டது. அதில் அச்சமயம் ஏறியிருந்த மிஸ்டர் N, W. ஷப்பர் என்கிறவரும் இன்னும் இரண்டு ஐரோப்பியர்களும் சுரங்கத்திற்கு இரையானார்கள். பிரேதங்கள் சின்னாபின்னமாகவும் அகோர பார்வையுடன் மேலே கொண்டுவரப்பட்டன.

---

## Death of Sivagiri Zamindar.

### ஒரு பாலிய ஜெமீந்தாரின் மரணம்.

சிவகிரி ஜெமின்தரராகிய மிஸ்டர் R.V.P. சின்னத்தம்பியார் சென்னையில் கடந்த வாரம் இறந்துபோய்விட்டதைக் கேள்விப்பட்டு விசனமடைகின்றோம். சென்னையிலிருக்கும் மதிராஸ் டைம்ஸ் பிரின்டிங் அண்டு பப்ளிஷிங் கம்பெனி லிமிட்டெட்டில் அவர் எதேஷ்டமான பங்குகள் எடுத்துக்கொண்டிருந்தார். இவர் மேஜர் ஆவதற்கு முந்தி கோர்ட் ஆப் வார்ட்சார் ஏற்படுத்திருக்கும் நியூயிங்டன் என்று சொல்லும்படியான கலாசாலையில் பயின்று வந்தார். இவர் மைனராக விருந்தபோது இவருடையஎஸ்டேட் கோர்ட்டாப் வார்ட்சார் பார்வையிலிருந்து வந்தபோது எதேஷ்டமான பணம் சேர்ந்து கையிருப்பாயிருந்தது. இந்த திரளான திரவியத்துடன் இவருடைய எஸ்டேட் இவரிடம் ஒப்புவிக்கப்பட்டது. எஸ்டேட்டிற்கு ஜெமீன்தாரராக வந்தவுடன் இவர் செய்த முதல்காரியம் என்னவென்றால் டைம்ஸ் பேப்பரை மெசர்ஸ் ஸ்பென்ஸர் கம்பெனியாரிடமிருந்து வாங்கினதே.! இவர் ஜீவித்திருந்து அதன் விருத்தியை கண்டுகளிக்க கொடுத்துவைக்காமல் போய்விட்டாரே என்று விசனிக்கின்றோம். இறந்துபோகும்போது இவருக்கு வயது 26 இவர் திடகாத்திர முடையவர். குதிரையில் ஏறி சவாரி செய்வதில் அதி சாதுர்ய முடையவர். பம்பாய், பூனா, கல்கத்தா, சென்னை ஆகிய இங்கர்களில் நடத்தப்பட்ட குதிரைப் பந்தயங்களில் இவருடைய குதிரைகள் பல தடவை வெற்றி அடைந்திருக்கின்றன.

## Death of a General Manager.

### ஜெனரல் மானேஜரின் மரணம்.

நியூயார்க் ஸ்டான்டர்ட் ஆயில் கம்பெனியின் பம்பாய் ஆபிசு மானேஜராகவிருந்த மிஸ்டர் J. A. பிரான்ட்சன் நிகழ்மீ ஆரம்பத்தில் இறந்துபோனார். இவர் இந்தியாவிற்கு வந்து 25 வருடமாகிறது. அனேக வருட காலம் கல்வி இலாகாவில் உத்தியோகம் பார்த்து வந்தார்.

## The Piece-goods Market.

### சீமை ஜவுளி மார்க்கட்,

சென்னை சீமை ஜவுளி வியாபாரிகளிடம் ஏற்கனவே எதேஷ்டமாக விருக்கும் கையிருப்பு சரக்குடன் எதேஷ்டமாகசரக்குகள் கப்பலிலவதுகொண்டிருக்கின்றன.

## Death of a Piece Goods-Merchant.

### ஒரு சீமை ஜவுளி வியாபாரியின் மரணம்

சென்னை கிடங்குத்தெருவில் சீமை ஜவுளி வியாபாரஞ் செய்யும் மெசர்ஸ் கிஜார் முகமத் சாகேப் கம்பெனியின் பாகஸ்தர்களில் ஒருவராகிய மௌல்வி சாயப் அப்துல்லா சாகேப் நிகழ்மீ 4உ பகல் 1 மணிக்கு வாணியம்பாடியில் இறந்துபோய்விட்டார். வாணியம்பாடியிலிருக்கும் அஞ்ஜுமானுக்குப் பிரசிடென்டாக யிருந்துவந்தனர். முஸலீம்மத ஞானம் நிரம்பப் பெற்றவர். பெண் கல்வி அபிவிருத்தியில் பற்றுடையவர்.

## Price of Pearl.
## முத்தின் விலை.

மனிதர்களுக்கு அதிருஷ்டம் வரும்போது எந்த விதத்திலாவது வருமென்று சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். அது உண்மையென்றே தோன்றுகிறது. ஆறு வருஷங்களுக்கு முன்னே ஒரு செம்படவன் பம்பாய்க்குச் சிறிது தூரத்துக்கு அப்பால் முத்துக்குளிக்கும் இடத்திற்கு அருகில் மீன் பிடித்துக்கொண்டிருந்தான். ஒரு சமயம் வலை வீசி இழுக்கும்போது மீன்களோடுகூட சிப்பி யொன்றும் அகப்பட்டது. அதை அவன் லக்ஷ்யம் செய்யாமல் அன்று முழுதும் மீன் பிடித்தானபிறகு சந்தைக்குச் சென்று மீன்களை விற்கையில் சிப்பியும் அவற்றுடனிருக்ககண்டு அதற்கும் ஒரு விலையைவைத்து விற்கலாம் என்று எண்ணி அதை யெடுத்துக்கொண்டுபோய் ஒரு மார்வாரியினிடம் விலை பேசினான். மார்வாரி அணா 8-க்குமேல் கொடுக்கமுடியாதெனச் சொல்லிக்கொண்டிருக்கையில் வீதி வழியே சென்ற வேறொருவன் சிப்பிக்குள் நல்ல முத்து இருப்பதாக தெரிந்துகொண்டு ரூபா ஐந்து கொடுப்பதாக செம்படவனிடம் சொன்னான். பணம் கொடுத்து முடிவதற்குள் ரஸ்தாவின் வழியே சென்ற எகூதி ஜாதியைச் சேர்ந்த முத்து வர்த்தகன் செம்படவன் விலை பேசிக்கொண்டிருந்த சிப்பிக்கு தான் ரூபா 200 கொடுப்பதாக முன் சென்றான். 8 அணா விலையிலிருந்து ரூபா 200 வரையில் விலை யேறிவிட்டதைக் கண்ட செம்படவன் பேராச்சிரியமும் ஆனந்தமுமடைந்து சிப்பி நல்ல விலை போகக்கூடியதென்பதை தெரிந்துகொண்டவனாய் உடனே பம்பாய் நகருக்கு ஓட்டம் பிடித்தான். அங்கிருந்து கடைசியாய் ஒரு வியாபாரியால் அம்முத்து பிரான்ஸுக்கு அனுப்பப்பட அங்கு மிக உயர்ந்த விலைக்கு விற்கப்பட்டதாம். செம்படவனுக்கு அத்தொகையில் பாதிக்கதிகம் கிடைத்ததெனத்தெரிகிறது.

---

## Death of A Muslim Merchant.
## ஒரு முஸ்லிம் பிரபுவின் மரணம்.

பெர்ஷியாதேச அரசாங்கப் பிரதிநிதியாகிய ஹாஜிமீர் ஜாகமதி இஸ்லாமி என்கிற பாரிவர்த்தகர் 31—12—1913ஷு ல் சென்னையில் இறந்துபோய் விட்டார். இறந்துபோவதற்கு ஒருமணி நேரத்திற்கு முந்திவரையில் தொழில் சுறு சுறுப்பாய் நடத்திக்கொண்டுவந்தார் அன்று சாயங்காலமே நடத்தப்பட்ட சமாதிகிரிகைக்கு அனேக பந்து மித்திரர்கள் வந்திருந்தார்கள்.

---

## Cotton Press on Fire.
## பஞ்சுப்பிரஸில் தீப்பிடித்தது.

சென்னையில் மூக்கர் நல்லமுத்து தெருவிலிருக்கும் பஞ்சுப் பொதிகள் அழுத்தும் பிரஸும் அதன் கட்டடமும் அடியோடு எரிந்துபோய்விட்டன. இக்கட்டடமும் அதனுள்ளிருந்த பிரசும் அப்துல் ரகிமான் சாயப்புக்குச் சொந்தமானவை. பிரஸ் நாராயண ரெட்டிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. சேதம் 16 ஆயிரமிருக்குமென்று சொல்லப்படுகிறது. ஜனவரிமாதம் 1-ந்தேதி காலை 3—மணிக்கு நாடகம் பார்த்துவிட்டு திரும்பி வீட்டிற்குபோன முருகேச நாயகரால் முதலில் தீபிடித்தது பார்க்கப்பட்டது. போலீஸாருக்கு அறிவிக்க ராயபுரத்திலிருந்தும் திருவல்லிக்கேணியிலிருந்தும் நெருப்பு அவிக்கும் யந்திரங்களுடன் அனேக கான்ஸ்டேபிள்கள் வந்து தீயை அடக்கினார்கள். தீபிடித்த சமயத்தில் அனேக பஞ்சுப்

பொதிகளும் தோல் மூடைகளும் கம்பளங்களு மிருந்தன; கூட்டத்திற்குள் இருந்தவர்களே பீடி, சிகரெட்டு சுருட்டு முதலியவைகளை பிடித்துப்போட்டு அலக்ஷியமாக போட்டிருக்கவேண்டுமென்று எண்ணப்படுகிறது. கட்டடம் இன்ஷியூர் செய்யப்படவில்லை என்று நாம் கேள்விப்படுகிறோம்.

——

## New French Cabinet.

### பிரான்சு தேச புதிய அரசாங்கம்.

பிரான்சுதேச புதிய அரசின் பிரெஸிடெண்டு ஒரு மீட்டிங்கில் பேசும்போது இதற்கு முந்தியிருந்த அரசாங்கம் எப்படி ருஷியாவுடனும் இங்கிலாண்டுடனும் சிநேகபாவமாயிருந்ததோ அதேமாதிரியாகத்தான் தம்முடைய கவர்ன்மெண்டு மிருக்குமென்று சொன்னார். இதற்குப் பிறகு பிரன்சு அரசாங்கத்திற்கும் துருக்கிக்கும் சமீபகாலத்தில் நடந்த உடன்படிக்கையின் ஷரத்துகளைச்சொன்னார், கிழக்கு தேசங்களில் பிரன்சுக்காரர்களுடைய உரிமைகளை, பாதுகாப்பதாக துருக்கிப் பலமான வாக்குக் கொடுத்திருக்கிறதென்றும் சிரியாவில் பிரன்ச் கல்வியை விருத்திசெய்ய உடன்பட்டிருக்கிறதென்றும் அனட்டோலியா, ஆர்மீனியா, சிரியா ஆகிய இப்பிராந்தியங்களில் பிரான்சு கண்ட்ராக்டர்கள் ரெயில் போட்டுக்கொள்ளவும் சிரியாவில் ஜாப்பியா, கேப்பா, டிரிப்போலி முதலிய நகர்களில் துறைமுகங்கள் கட்டிக்கொள்ள துருக்கி பிரென்சுக் கண்டிராக்டர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறதென்று சொன்னார். 900 கோடி பிரான்க் மூலதனம் பிரான்சுக்குச் சொந்தமானது துருக்கியில் போட்டு முடக்கப்பட்டிருப்பதால் பிரான்சு அலக்ஷியமாக இருக்கமுடியாது என்று சொன்னார்.

——

## Soap Manufactuer in China.

### சீனாவில் சோப்பு செய்கிறவர்கள்.

சில சீமைவர்த்தக கம்பெனிகள் ஒன்று சேர்ந்து சீன தேசத்திலிருக்கும் கால்கோ நகரில சோப்புகளும் அதைச் சேர்ந்த சாமான்களும் தயார் செய்து விற்பனை செய்வதற்காக 350 லக்ஷம் பவுன் மூலதனத்துடன் ஒரு கம்பெனி ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

——

## Artificial Marble.

### போலி சலவைக்கல்.

ஜெர்மனி தேசத்திலிருக்கும் போஹிமியா மாகாணத்திலிருக்கும் இயற்கை சலவை கற்களுக்குப் பதிலாக உபயோகப்படுத்தப்படக்கூடிய போலிகற்கள் செய்யும் விதம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாம். போலிகற்கள் இயற்கை கற்களைவிட பலமானதாயும் உறுதியுள்ளதாயுமிருக்கின்றன .விலையும் மிக கம்மியாம். பாதி கையாலும் பாதியந்திரத்தாலும் செய்யப் படுகிறது. இப்போது பிரத்தியக்ஷத்தில் இவ்விரு வேலைகளும் வியான ஹாம்பர்க் மான்கீம் ஆகிய இந்த நகர்களில் செய்யப்பட்டு வருகின்றன.

——

## Temporary Time-Table for S. I. R.

### தென்னிந்தியா ரயில்வேயில் டயம் டேபில் மாறுதல்.

இதற்கு முந்தி காலை 5-15 மணிக்கு பீச் ஸ்டேஷனைவிட்டு புறப்பட்ட தூத்துக்குடி பாசஞ்ஜர் வண்டி காலை 4 மணிக்கு புறப்படுகிறது. போட் மெயில் மத்தியானம் 4-20 கு புறப்படுகிறது. மாலை 6-15க்கு புறப்பட்டுக் கொண்டிருந்த மதுரை எக்ஸ் பிரஸ்வண்டி இப்போது சாயங்காலம் 5-25 க்குப் புறப்படு

கிறது வழக்கமாய் இரவு 7-15க்கு புறப்பட்டுக்கொண்டிருந்த மதுரை பாசஞ்ஜர் மாலை 6-15க்கு புறப்படுகிறது.

காலை 7-25க்கு வந்து கொண்டிருந்த மதுரை எக்ஸ்பிரஸ் காலை 8-25க்கு பீச் ஸ்டேஷனுக்கு வருகிறது. போட் மெயில் காலை 9 மணிக்கு வந்து சேருகிறது மதுரை பாசஞ்ஜர் வண்டி பீச் ஸ்டேஷனுக்கு வருகிறதில்லை எழும்பூரிலேயே நின்று போகிறது.

என். பி. இந்த ஏற்பாடு சென்ற டிசம்பர் மாதம் 23-ந்தேதி முதல் நடந்துவருகிறது. ஆனால் கொஞ்ச காலத்திற்குதா னிருக்கும்.

———:(*):———

## A Heavy Sentence.
### கடுமையான தண்டனை.

இங்கிலாண்டிலிருக்கும் லீஸ்ட்டர் என்னும் ஊரிலிருக்கும் வீலர் அண்டு கோ என்கிற வியாபார கம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் W. A. வீலர் என்பவர் ஜப்பானில் மோசக்கருத்தான எண்ணத்துடன் வந்து தாழ்ந்த விலையுடைய ஒரு குத்தி தைக்கும் மிஷினை உயர்ந்ததென்று சொல்லி 10 ஆயிரம்பவுனைச் சேகரித்து விட்டார். இந்த விஷயம் கவர்ன்மெண்டாருக்கு எட்டி அவர் கைதி செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு 4 மாதம் ஜப்பானில் தண்டிக்கப்பட்டார். அப்பீல் செய்து கொண்டதில் அசல் தீர்ப்பே உறுதி செய்யப்பட்டது.

———

## Railway Outrage.
### ஒரு ரயிலைக் கொள்ளை அடிக்க எத்தனம்.

பீகூவாரிலிருந்து கல்கத்தாவுக்குச் சென்ற டிசம்பர்மீ 27உ இரவு வந்து கொண்டிருந்த மேயில் டிரேய்ன் காலை 1-மணிக்கு ஜான்பிராபாட் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தவுடன் பிளாட்பாரத்தில் இதற்கென்று ஒளிந்து கொண்டிருந்த தீவிட்டிக் கொள்ளைக்காரர்கள் ரயிலைத் தாக்கி கார்ட் வில்சனை முதலில் சுட்டுக் கொன்றுவிட்டு பிறகு இஞ்சின் வண்டிக்கு வந்து பயர்மேனையும், டிரைவர் ஒப்ரியனையும் துப்பாக்கியால் சுட்டார்கள். பயர்மன் உடனே மாண்டுபோனான். டிரைவர் காயப்பட்டு காம்ப்பூரிலிருக்கும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டான். பின்பு வந்த தந்தி சமாச்சாரத்தால் அவனும் இறந்துபோய்விட்டதாகத் தெரிகிறது. பிறகு பிரயாணிகளுடைய வண்டியினிடம்வந்து அவர்களை அடிக்க எத்தனித்தார்கள். கஜானா பொட்டி கார்டு வண்டியிலிருக்கிறதா என்று போய் பார்த்தார்கள். இதற்குள்ளாக ஒரு பட்டாளத்தைச்சேர்ந்த ஒரு கூட்டத்தார்வந்து எதிர்க்கவே ஓட்டம் பிடித்துவிட்டார்கள்.

———

## Pudukottah Exhibition.
### புதுக்கோட்டை பொருட்காக்ஷி.

புதுக்கோட்டை சமஸ்தானபதியின் ஆதரிப்பின்பேரில் ஒரு பொருட்காக்ஷி சமஸ்தானத்திலே சென்ற 19ம் தேதி நடத்தப்பட்டது மாணவர்களின் தேகப்பயிற்சிசாமான்கள் முதல் காசியிலிருந்து பட்டுபீதாம்பரங்கள்வரையில் அனேக சாமான்கள் காண்பிக்கப்பட்டன. புதுக்கோட்டையில் பயிராகும் கந்தமூல பதார்த்தங்கள் காண்பிக்கப்பட்டன. சென்னையிலிருந்து சித்திரப் பள்ளிக்கூடத்தார் அனேகவேலைகள் அமை

ந்துள்ள சாமான்களைக் கொண்டுபோயிருந்தார்கள். அனேக பொட்டகிராப் படங்களும் வகை வகையான எண்ணெய்உருவப்படங்களும் காண்பிக்கப்பட்டன. வேலைப்பாடுள்ள வெள்ளி சாமான்களும் மரசாமான்களும் வந்திருந்தன. விதவிதமான பட்டு அடைகளுக்கு ஒரு கணக்குமில்லை வழக்குமில்லை. நாளுக்குநாள் க்ஷீணித்துக்கொண்டுவரும் நம் நாட்டு கைவளையல் தொழில் தத்ரூபமாய்க் காணப்பட்டது.

---

## Rumoured Resignation of The Viceroy.

### மேன்மை தங்கிய வைசிராய் அவர்களின் ராஜி நாமா.

மேன்மை தங்கிய வைசிராய் லார்ட் ஹார்டிஞ்சு அவர்கள் அடுத்த பிப்ரவரி மாதத்தில் உத்தியோகத்தை ராஜிநாமா கொடுத்துவிட்டு சீமைக்குப் போகப்போகிறதாக ஒரு வதந்தி இங்கிலாண்டிலும் இந்தியாவிலும் உலாவிக்கொண்டு வந்தது. ஆனால் கனந்தங்கிய வைஸிராய் அவர்கள் கல்கத்தா கிளப்பில் நடந்த விருந்தில் பேசியதைக்கொண்டு இந்தவதந்தி ஆதாரமற்ற வதந்தி என்று தெரிய வருகிறது. தாம் முழுதிலும் தேகசௌக்கியமாக யிருக்கிறதாகவும் தினம் ஒன்றக்கு 8 அல்லது 9 மணி நேரம் வரையில் வேலை செய்து வருவதாகவும் சமீப காலத்தில் மைசூருக்குப் போனபோது ஒரு நாள் 13 மணி நேரங்கூட தொடர்ந்த தேர்த்தியாக வேட்டையாடினதாகவும் தாம் விஸ்வாசித்துவரும் இந்தியாவிலும் இந்திய ஜனங்கள் மத்தியில் தம்முடைய உத்தியோக காலம் முடியும் பரியந்த மிருந்து ஜனங்களுக்கு தம்மால் செய்யக்கூடிய நன்மைகளைச்செய்துவிட்டுதான் சீமைக்குப் போகவேண்டுமென்று தாம் தீர்மானித்திருப்பதாகச் சொன்னார்கள்.

---

## The New Year Honors List.

### புதிய வருஷ கௌரவப்பட்டங்கள்.

---

புதிய வருட கௌரவப்பட்டங்களின் ஜாப்தாவைப் பார்த்தால் வர்த்தக வகுப்பாருக்குள் பிரபலமான முதலாளிகளுக்கு கௌரவப்பட்டங்கள் பெரும்பாலும் இம்முறை கொடுக்கப்படாமலிருப்பது விசனிக்கக்கூடியதா யிருக்கிறது. வர்த்தக வகுப்பார் இப்படி கவனக்குறைவு செய்யப்பட்டது இது முதல் தடவையல்ல. எப்படியிருந்தாலும் சரி நம்முடைய ராஜதானியில் மெசர்ஸ் பின்னி அண்டு கோவைச் சேர்ந்த மிஸ்டர் ஜே. அலெக்சாண்டர் பாய்சனுக்கு நயிட் என்கிற பட்டம் சூட்டப்பட்டிருபபது நமக்கு சந்தோஷத்தை விளைவிக்கின்றது. மெசர்ஸ் பின்னி அண்டு கம்பெனியார் பிரிடிஷ் இந்தியன் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கும் மெசர்ஸ் கிரிண்லே குரூம் கம்பெனிக்கு ஏஜெண்டுகளாக விருப்பது மன்றி அனேக ஆலைகளுக்கும், காபி, தேயிலை எஸ்டேட்டுகளுக்கும் ஏஜெண்டுகளாக யிருக்கிறார்கள். இது சென்னையில் பழைய கால அவுஸ்களில் ஒன்று; எல்லோருடைய மதியாதைக்கும் பாத்திரமானது. மிஸ்டர் பாஸ்சன் அதற்கு சீனியர் மெம்பராக யிருக்கிறார். சில வருடங்களுக்குமுந்தி மிஸ்டர் பாய்சன் உத்தியோகத்தைவிட்டு விலகி சுகவாசியாக யிருந்து வந்தார். ஆனால் அர்பத்நட் பாங்கு முறிந்துபோன சமயத்தில் பின்னி கம்பெனியும் ஆட்டம் கண்டபோது மிஸ்டர்பாய்ஸன் ஷெ கம்

பெனியின் மானேஜ்மெண்டை ஒப்புக்கொண்டு நேர்ந்த கஷ்டங்களுடன் போராடி அவை களை விரட்டி கம்பெனியை பலமான ஸ்திதியில் கொண்டுவந்துவைத்தார். மிஸ்டர் பாய்சன் சென்னைச் சேம்பர் ஆப் காமர்சிலும் முக்கியமான மெம்பருகவும் மதிராஸ் பாங்கியின் டைரெக்டர்களில் ஒருவராகவுமிருந்து வருகின்றனர். அவருடைய புத்திரராகிய மிஸ்டர் ஜே. வி பாய்சன் என்பவரும் மெஸர்ஸ் பின்னி அண்டு கோவில் ஒரு மெம்பராக யிருக்கிருர். டில்லியில் பாரி வியாபாரியாகவிருக்கும் ஹாஜிபுக்ஷ் யிலேய்யா என்பவருக்கும் கௌரவப்பட்டம் சூட்டப்பட்டிருக்கிருர். பம்பாயிவிருக்கும் மெஸர்ஸ் முல்ஜ ஜீத்தா கம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் சத்ரபூஜ் கோவர்த்தனதாஸ் என்பவருக்கு கேபசர்–இ–ஹிந்த் பதக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. ராஜபுதனத்தில் பாங்கு வைத்து கீர்த்தியுடன் நடத்திவரும் மிஸ்டர் சம்பாலாலுக்கு ராவ்சாஹிப் என்கிற பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது.

## Indian Industrial Progress.

### இந்திய கைத்தொழிலின் அபிவிர்த்தி.

கராச்சியில் கூடிய கைத்தொழில் கான்பரென்சிற்குச் சபாநாயகராயிருந்த மிஸ்டர் லல்லுபாஹாய் சாமல்தாஸ் இந்திய பஞ்சாலைகள் தயார் செய்துவரும் துணிகள்மீது போடப்பட்டுவரும் தீர்வையை கவர்ன்மெண்டார் கூடிய சீக்கிரம் ரத்து செய்துவிடவேண்டுமென்று தம்முடைய பிரசங்கத்தில் வற்புறுத்திப்பேசினர்.

## Mercantile fleet.

### வியாபார ஸ்டீமர்கள்.

1912-13-ல் பிரிடிஷ் பாவுட்டாவை உடைய ஒவ்வொரு வர்த்தக கப்பலும் நல்ல வேலைகள் செய்தனவென்று கல்கட்டாவில் பிரசுரமாகும் காமர்ஸ் என்னும் பத்திரிகைக் கூறுகின்றது.



## A Heavy Sentence.

### கல்கத்தாவில் கடுமையான தண்டனை.

சீமையிலிருக்கும் கென்ஸ்விலர் கம்பெனியைச்சேர்ந்த மிஸ்டர் வீலர் என்பவர் ஜப்பானுக்குச் சென்று உபயோகமற்ற பழைய தையல் மிஷீன்களை புதிய மிஷீன்கள் என்றும் இன்னும் இம்மாதிரியான புரட்டுகளைச் சொல்லி பத்தாயிரம் பவுன் சேகரித்துக்கொண்டார் என்று டோக்கியோவிலிருக்கும் போலீசு அதிகாரிகள் அவரை கைதி செய்து விசாரணைக்குட்படுத்த கிரிமினல் கோர்ட்டார் அவருக்கு 6 மாத தண்டனை விதித்தார்கள். அப்பீலில் அசல்தண்டனையே உறுதிப்படுத்தப்பட்டது.

## Coal.

### நிலக்கரி.

கல்கட்டாவிலிருக்கும் மெஸர்ஸ் கிப்பெர்ன் கம்பெனியார் பெரிய நிலக்கரி சுரங்கங்கள் உடையவர்கள். இவர்கள் 1915-ல் டெலிவர் செய்யப்படும்படியாக நிலக்கரி சப்ளைக்காக டெண்டர்கள் கூப்பிட்டிருக்கிருர்கள். ஆதலால் அவர்களுடைய சுரங்கங்களில் உண்டாகும். நிலக்கரி போதாதபடி அதற்கு மேற்கொண்ட நிலக்கரிக்கும் அவர்களிடம் ஆர்டர்களிருக்கின்றன என்று விளங்குகின்றது.

## China's Coal Trade.

### சீன தேச நிலக்கரி வியாபாரம்.

சீனவில் உள்ள ஒரு பாரி நிலக்கரி கம்பெனிக்கு 1912-13 யைவிட 1913–14-ல் இரட்டிப்பு மடங்கு அசல் லாபம் தேறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## Indian Gold Output.

### இந்தியாவில் பொன் உற்பத்தி.

கோலார் பொன் சுரங்கங்களிலும் ஹட்டி நிஜாம் சுரங்கத்திலும், வட அனந்தப்பூர் சுரங்கத்திலுமாகச் சேர்ந்து சென்ற நவம்பர் மாதம் 49386 அவுன்ஸ் பொன் உற்பத்தியாயிருக்கிறது. ஆகவே அக்டோபர் மாதத்தைவிட 438 அவுன்ஸ் குறைவு.

---

## All India United Insurance Co.

### எல்லா இந்தியா யுனைடெட் இன்ஷியூரேன்ஸ் கம்பெனி.

மெசர்ஸ் எம். எம். கிராஜி கம்பெனியாரை காரியதரிசிகளாக நியமிக்கும்பொருட்டு ஒரு பெரிய ஜெனரல் மீட்டிங் இம்மாதத்தில் நடக்கப்போகிறது.

---

## Hindustan Co-operative Insurance Society.

### இந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷியூரேன்ஸ் சங்கம்.

ஹிந்துஸ்தான் கோவாபரேட்டிவ் இன்ஷியூரென்ஸ் சங்கத்தின் சமாசாரங்களையும் விசாரணை செய்யவேண்டுமென்று சில பங்குதாரர்களும் பாலிசி பெற்றுக்கொண்டிருப்பவர்களும் ஒன்று சேர்ந்து இந்தியா கவர்ன்மெண்டிற்கு மனு செய்துகொண்டிருக்கிறார்கள்.

---

## Fire Accident.

### தீ விபத்து.

பம்பாயிலிருக்கும் மட்டன் தெருவில் ஒரு மர சாமான் ஷாப்பில் தீப்பிடித்துக்கொண்டு அதுவும் அதற்கு பக்கத்திலுள்ள இரண்டு ஷாப்புகளும் அக்னிபகவானுக்கு இரையாகின. உயிர்ச்சேதமில்லை. ஆனால் ரூ. 1,50,000 பொருமானமுள்ள சாமான்கள் சேதப்பட்டுப் போய்விட்டன.

---

## A Cement Factory.

### ஒரு சிமிட்டி தொழிற்சாலை.

சிமிட்டி தொழிற்சாலை ஒன்று கராச்சியிலிருக்கும் ஒரு பெரிய அவுஸ்காரர்களால் கராச்சிக்கு சமீபத்திலுள்ள ஒரு விடத்தில் ஸ்தாபிக்கப்படப்போகிறது. இதில் ஓடுகளும் செய்யப்படுமாம்.

---

## Gold to India.

### இந்தியாவிற்குப் பொன்.

பி. அண்டு ஓ கம்பெனியாரைச் சேர்ந்த "அரேபியா "என்னும்" ஸ்டீமர் மூலியமாக இங்கிலாண்டிலிருந்து நிகழ்மாதம் 210,000 பவுன் பொருமானமுள்ள பொன் இந்தியாவிற்கு வந்திருக்கிறது.

---:o:---

## Banking Crisis.

### பாங்கி முறிவுகள்

கராச்சியில் கூடிய ஆசார சீர்திருத்த கான்பரன்சில் கான்பரன்சின் சபாநாயகராயிருந்த சர். நாராயணராவ்ஜிசந்தாவர்க்கர் பாங்குகளின் முறிவுகளைப்பற்றி அடியிற் கண்டபடி பேசினார்:—உத்தியோகஸ்தர்கள், ஜனங்களுக்கு வியாபாரப்படிப்பு கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இந்திய தேசாபிமானிகள் ஜனங்கள் தெய்வத்தன்மையை இழந்து வருகிறபடியால் தொட்டகாரியங்கள் வெற்றி பெறுகிறதில்லை என்று கதறினார்கள். ஆகவே சாதாரணக்கல்வி இந்தியர்களாலும் ஐரோப்பியர்களாலும் கண்டனஞ் செய்யப்பட்டது. அதற்குமேல் அமிதவாதி கக்ஷியார் தோன்றினார்கள். அவர்களுக்குமேல் அராஜகக் கொள்கையுடையவர்கள் தோன்றினார்

கள். முடிவு என்னவென்றால் உண்மையான சுதேசியம் அனேகருடைய கோபத்திற்குப் பாத்திரமானது. கைத்தொழில் முயற்சிகள் திடீரென்று தோன்றிவளர்ந்து கொண்டுவந்தன. ஆனால் அந்த சுதேச முயற்சிகள் எல்லாம் மணலின்பேரில் கட்டப்பட்டுவந்தன. வியாபாரம் என்றால் நாணயம்; நாணயமென்றால் நடத்தை என்பது தாற்பரியம். அப்படி கவனித்து பரிசீலனை செய்யும்போது இது ஆசாரசீர்திருத்த சபையில் கவனித்து பேசப்படவேண்டிய விஷயமாகிறது. ஒரு மனிதனை சிக்கனமாகச் செலவுசெய்யும் மனிதனாக தயார் செய்வதற்குமுந்தி அவன் ஒழுங்கான நடத்தை உடையவனாக விருக்கும்படி தயார் செய்யப்படவேண்டும். முறிந்துபோன பாங்குகளை ஸ்தாபித்தவர்கள் வியாபாரத்தில் நெப்போலியனாக.........................................எண்ணப்பட்டார்கள். மற்றவர்களுடைய பணத்தை வைத்துக்கொண்டு பெரிய பணக்காரர்களாய்விட்டார்கள்! பம்பாய் சம்பந்தப்பட்ட வரையிலாவது அவர்கள ஒழுங்கான நடத்தையுடையவர்களாக விராதது நம்முடைய துர் அதிர்ஷ்டம். கபடமான நடத்தை ஒழுங்கான நடத்தைபோல் காணப்பட்டது. முடிவு என்னவென்றால் பாங்குகள் முறிந்துபோயின. ஆயிரக்கணக்கான ஜனங்கள் சொல்லமுடியாத கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். இப்போது உண்டாயிருக்கும் பாங்கு முறிவுகள் வெகு வேகமாக ஓடிக்கொண்டுவந்த "வியாபாரம்" என்று சொலலும்படியான ரதத்தை 50 வருடத்திற்கு முன்னிருந்த நிலையில் கொண்டு வந்து நிறுத்திவிட்டது!

## A Venture.

### ஒரு துணிச்சலான பிரயத்தினம்.

இங்கிலாண்டிற்கும் இந்தியாவிற்கும் 9000 மயில்தூரம். இந்ததூரத்தை ஒரு சிறிய உல்லாசக்கப்பலில்கடந்துபோகிறதென்று கல்கத்தாவிலிருக்கும் ஒரு தாசிரியாகிய மிஸ்டர் கைஷராக் என்பவர் தீர்மானித்து தம்முடன்கூட 9 ஐரோப்பியர்களையும் கப்பலில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டுப் போயிருக்கிறார், இந்த கப்பலோ இங்கிலாண்டில் செய்யப்பட்டுவந்திருக்கிறது. பிரயாணம் முதலில் போர்ட் சேயிட் என்னும் துறைமுகத்தில் முடிவடைகிறது. மத்தியக்கடல் கொந்தளிப்பா யிருப்பதை முன்னிட்டு கப்பலை அந்த துறைமுகத்தில் நிறுத்திப்போட்டு ஸ்டீமரில் ஏறி இங்கிலாண்டிற்குப்போய் மேமாதம் வந்து மறுபடியும் கப்பலில் இங்கிலாண்டிற்குப் பிரயாணஞ் செய்வார்.

## Government Training School in Madras.

### சென்னையில் கவர்ன்மெண்டு டிரேயினிங் கூல்.

சென்னையில் பள்ளிக்கூட உபாத்தியாயர்களைத் தயார் செய்யும்படியாக ஒரு டிரெயினிங் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கும்படியாக வித்தை இலாக்காத் தலைவருக்கு கவர்ன்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

## Municipal Proceedings.

### முனிசிபாலிடி நடவடிக்கைகள்.

முனிசிபாலிட்டி, லோக்கல் போர்டு மீட்டிங்குகளின் நடவடிக்கைகளை உடனே ஜில்லா கெஜட்டுகளில் பயிரங்கப்படுத்தவேண்டுமென்று கவர்ன்மெண்டார் கண்டிப்பான உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

## British Trade Returns.

### பிரிட்டிஷ் ராஜ்ஜிய ஏற்றுமதி இறக்குமதிகள்.

சென்ற டிசம்பர் மாதத்தில் இறக்குமதி 2,950,651 பவுன் குறைந்துபோய்விட்டது. இதற்குக் காரணம் பெரும்பாலும் பஞ்சு, தானியங்கள் இறக்குமதியில் குறைந்துபோயிருக்கின்றன. ஏற்றுமதி 2,867,882 பவுன் ஏறியிருக்கிறது. 1913–ம் வருடத்திய மொத்தக் கணக்கை பார்க்குமளவில் ஏற்றுமதியும் இறக்குமதியும் முந்திய எல்லா வருடங்களை விட மிகவும் விசேஷமாக நடந்துவந்திருக்கின்றன. அதாவது இறக்குமதி 24,250,000 பவுன்; ஏற்றுமதி 38,250,000 பவுன். பிரஸ்தாப வருஷத்தில் அதிகப்படியாக இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகள், ஆகார சாமான்களும் புகையிலேயும் 10,000,000 பவுன்; மரம் 100,000 பவுன். நாணயங்கள் 2,50,000 பவுன். கம்பளம் 1,250,000 பவுன்; ஏற்றுமதியில் அதிகப்படியான சரக்குகள்:—நிலக்கரி—11,000,000 பவுன்; இரும்பு சாமான்கள்—5,500,000 பவுன்; யந்திர சாமான்கள் 4000,000 பவுன்; புதிய கப்பல்கள் 4,000,000 பவுன்; பஞ்சு 5,000,000 பவுன்; செயற்கைப் பொருள்கள் 26,500,000 பவுன். இறக்குமதியில் குறைந்துபோன சரக்கு, பருத்தி 2,700,000 பவுனும், ஏற்றுமதியில் குறைந்து போன சரக்கு கம்பளம் 50,000 பவுன்.

---

## Peace Society.

### சமாதான சங்கம்.

இங்கிலாண்டில் சமாதான சங்கமொன்று ஒரு பெரிய சங்கம் இருக்கிறது. இதின் நிர்வாகக் கமிட்டியார் நிகழ் மாத ஆரம்பத்தில் நடத்தின மீட்டிங்கில், கிரேட் பிரிட்டன் தேசத்திலும் மற்ற ஐரோப்பிய தேசங்களிலும் தரைப்படை கப்பல் படைகளை பெருக்கி பலப்படுத்திக் கொள்ளுவதில் அபரிமிதமாக செலவு செய்யப்பட்டு வருகிறதென்றும், மேற்படி தேசங்களுக்குள் சினேகிதத்தன்மை விருத்தியாகி சமாதானம் பரவி வரும்போது ஏராளமான பணம் சைனியங்கள்மீது செலவுசெய்ய நியாயமில்லை என்றும் ஆதலால் மேற்படி செலவுகளைக் குறைத்துப் போடவேண்டுமென்று ஒரு தீர்மானம்செய்து இங்கிலாண்டு பிரதம மந்திரியாருக்கு அனுப்பியிருக்கிறது.

---

## A New Method of Delivering Speeches.

### பிரசங்கங்கள் செய்ய ஒரு நவீன விதம்.

அமெரிக்கா பிரசிடென்ட் மிஸ்டர் வில்சன் பெரும்பாலும் வாஷிங்டன்னிலிருப்பவர். 800 மைலுக்கு அப்பாலுள்ள நியூயார்க் என்னும் ஊரிலுள்ள சேம்பர் ஆப் காமர்சின் வருஷாந்திரக் கூட்டத்திற்குச் சேர்மேனாக விருப்பதாக ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் அவருடைய தேகஸ்திதி 800 மைல் பிரயாணம் செய்து போவதற்கு இடம்கொடுக்கவில்லை. ஆகவே நூதனமாக (Electro Plane Principle) கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் டெலிபோன் வாஷிங்டன்னிலும் நியூயார்க் சேம்பர் ஆப் காமர்ஸிலும் அமைக்கப்பட்டது. மேற்படி வருஷாந்திரக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லாரும் விருந்து சாப்பிட்டவுடன் ஒவ்வொருவரும் தங்களுடைய கையில் டெலிபோன் ரிசீவரை (Receiver காதில் வாங்கிக்கொள்ளும் கருவி) காதில் வைத்துக்கொள்ளவே, பிரஸிடெண்டு மிஸ்டர் வில்ஸன் வாஷிங்டன்னில் தம்முடைய அரண்மனையிலிருந்தபடியே டெலிபோன் மூலியமாக பிரசங்கம் செய்தாராம். பிரசங்கத்தின் ஒவ்வொரு வார்த்தையும் மிகவும் தெளிவாய்க்கேட்டதாம்.

## Grazing Areas.

### மேல் சங்கங்கள்.

காட்டிலாக்கா கமிஷன் செய்த சிபார்சுபடி கால்நடைமேய்ச்சல்ஸ் தலங்களை பஞ்சாயத்தார்கள்மானேஜ்மெண்டுசெய்து வரும்படியாக ரெவினியூ போர்டு மெம்பர்களுள் ஒருவராகிய மிஸ்டர் ஆர். சி. சி. கார் அவர்கள் செங்கற்பட்டு, நெல்லூர் வடவேலூர், தென்சேலம் மத்திய கோயம்பத்தூர், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, கிருஷ்ணா ஆகிய இந்த ஜில்லாக்களில் ஏற்பாடு செய்துகொண்டு வருகிறார்கள். கால்நடைகளுக்கு மேய்ச்சல் ஸ்தலங்களில்லையே என்று கூப்பாடு போட்டுக்கொண்டுவந்த மிராசுதார்களுடைய குறை நீங்கிப்போகுமென்று நம்புகின்றோம்.

---

## French Loan.

### பிரான்சு கடன்.

பிரான்சு தேசத்துக்குத் தேவையான பணங்கள் மேற்படி தேசமுயற்சிகளில் போட்டு முடக்கப்படும் பரியந்தம் அன்னியதேச அரசாங்கத்தார்கள் பிரான்சில் கடன் வாங்கும் படியாக விடப்படக் கூடாதென்று பிரான்ஸ் புதிய கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

---

## Rise of Prices.

### விலைகளின் ஏற்றம்.

தற்காலத்தில் ஆகார சாமான்கள் உள்பட எல்லா சாமான்களுடைய விலை ஏறியிருப்பதற்குள்ள காரணங்களைப்பற்றி விசாரணை செய்யும்பொருட்டு ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. இந்த கமிஷன் விசாரணைசெய்து கவர்ன்மெண்டாருக்கு ரிப்போர்ட் செய்திருக்கிறது. ஆனால் கவர்ன்மெண்டார் அதின்பேரில் என்ன உத்திரவு செய்வார்கள் என்று இப்போது சொலல முடியாதென்று வைசிராய் சட்டசபையில் இதைப்பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் சொல்லப்பட்டது.

---

## Co-operative Societies in Canada.

### கன்னடாவில் ஐக்கிய சங்கம்.

கன்னடா தேசததில் குடியேறியிருக்கும் ஹிந்துக்கள் கூடி ஒரு ஐக்கிய முயற்சி சங்கம் ஸ்தாபிக்கப்போகிறார்கள்.

---

## Weights and Measures Committee.

### படிபடிக்கல் கமிட்டி.

இந்தியா முழுவதிலும் ஒரே அளவும் ஒரே நிறையும் பிரயோகப்படுத்தும்படியான ஒரு அளவும் ஒரு நிறையும் கண்டுபிடிக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு கமிட்டியார் இந்த பிரஸ்னையைப் பரிசீலனை செய்ய சென்னைக்கு வந்திருக்கிறார்கள். கொச்சின் கரூர் திருச்சி தூத்துக்குடி விருதுப்பட்டி மதுரை நாகப்பட்டணம் பன்ருட்டி முதலிய வர்த்தக ஸ்தலங்களுக்கு இம்மாதத்தில் போகப்போகிறார்கள். பிரபல வியாபாரிகள் அவசியமாய் ஏதேனும் சொல்லிக்கொள்ளலாமென்று விளம்பரம் பகிரங்கப்படுத்தி இருக்கிறார்கள்.

---

## Suicide Club.

### தற்கொலை கிளப்.

ருஷியாவில் பாலியர்கள் அடிக்கடி தற்கொலை செய்துகொண்டு இறந்துபோகிறார்கள். இதற்கு சிலகாலமாக காரணம் தெரியாமலிருந்தது. இப்போது ரகசிய போலீஸார் விசாரணையால் சில தினங்களுக்கு முந்தி இறந்துபோன இரண்டு பாலியர்களில் ஒருவனுடைய ஜோப்பில் ஒரு துண்டு கடிதம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அதில் கிளப்புக்காரர்கள் தனக்கு நான்கு தினங்கள்தான் சாவகாசம் கொடுத்திருக்கிறார்கள் ஆதலால் அந்த கெடுவிற்குள் இறந்துபோகவேண்டியதாயிருக்கிறதென்று அவனுடைய சினேகித

னுக்கு எழுதப்பட்டிருந்ததைக்கொண்டு செண்ட் பிட்டர்ஸ் பர்க்கில் ரகசிய ஒரு தற்கொலைக் கிளப் இருப்பதாக எண்ணப்படுகிறது.

---

## Alchemy.

### ஈயத்தைப் பொன்னுக்குதல்.

ஈயத்திற்கு (100,000 ஒரு அளவு) மின்சாரத்தைப் பொருத்தினல் தங்கமாய்ப் போய் விடுகிறதென்று புரேபசர் சாடி என்பவர் தைரியமாய்க் கூறுகிருர்.

---

## English Mail.

### சீமைத் தபால்.

இவ்வாரம் சீமைத் தபால் கொண்டுவரும் அரேபியா என்கிற ஸ்டீமர் நாளைய தினமாகிய வெள்ளிக்கிழமை வழக்கத்திற்கு 7-மணி நேரம் தாமதமாக பம்பாய் துறைமுகத்தைப் பிடிக்கப் போகிறதாம். தாமதத்திற்குக் காரணம் என்னவென்ருல் பிரான்சுக்கும் போர்ட் சேயிடுக்கும் மத்தியில் கடல் கொந்தளிப்பா யிருந்ததாம்.

---

## Infant Mortality.

### சிசு மரணம்.

நியூஜிலண்டு தேசத்திலிருக்கும் டண்டி என்னும் ஊரில் 60 ஆயிரம் ஜனங்கள் வசிக்கிருர்கள். 6 வருடங்களுக்கு முந்தி 100-க்கு 8 சிசுக்கள் மரண மடைந்துகொண் டிருந்தனவாம். இப்போது 100-க்கு 4-தான் மரண மடைகின்றன. இதற்குக் காரணம் என்ன வென்ருல் சுகாதார சங்கங்கள் ஏற்பட்டு சிசுக்களை வளர்க்க தாயார்களை பழக்கும்படி தக்க பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்திருக்கின்றனவாம்.

---

## A Bill.

### ஒரு மசோதா ஆக்ட்.

ஒருவனுடைய நெல் வயல்களுக்கும் மற்றொருவனுடைய நிலத்திற்கும் இடையில் குத்துச் செடிகள் விளைந்து பயிரைப் பாழாக்காமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நிலத்தின் சொந்தக் காரர்களுடைய தென்றும இந்தப் பொறுப்பை உணர்ந்து ஜாக்கிரதையாக இல்லாத வரையில் யாருடைய அஜாக்கிறதையால் நிலமும் பயிரும் கெட்டுப்போனதோ அவன் நஷ்டம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று ஒரு சட்டம் பிறப்பிக்க மலேதீவாந்திர நாடுகளில் ஒரு மசோதா ஆக்ட் தயார் செய்யப்பட்டு வருகிறதாம்.

---

## Astrology.

### இராஜ ஜோசியர்.

இந்தியா ராஜஜோசியர் என்று சொல்லும்படியான மிஸ்டர் டி. பி. ஜெயட்சி என்பவர் அடியிற்கண்ட சிற்றரசர்களுக்குள் நேப்பாளம் காஷ்மீரம் சமஸ்தானாதிபதிகள் நோய் பயத்தால் கஷ்டப்படுவார்கள், போபால் ஜெய்ப்பூர், பிக்கானீர், ஆன்வார், மைசூர் சமஸ்தானாதிபதிகள் பிரிட்டிஷ் சக்ரவர்த்தியின் தயவைப் பெறுவார்கள். பரோடா, இந்தோர், சிக்கிம் சிற்றரசர்கள் கவலை சமுத்திரததில் விழுந்து தத்தளிப்பார்கள். டோலிபூர், குவாலியர் திருவாங்கூர் சமஸ்தானாதிபதிகள் அவர்களுடைய தேசங்களில் அமெரிக்கையற்று கஷ்டப்படுவார்கள்; ஐதராபாத் ஜலாபாட்ஜோட்ப்பூர் சமஸ்தானங்கள் பண நஷ்ட மடையும்; கபர்தாலாவும் கூச்பிகாரும் சத்துருக்களாலும் பிராண அபாயத்தாலும கஷ்ட மடைவார்கள் இந்த வருடத்தில்.

---

## Death of a Sub Judge.

### சப் ஜட்ஜியின் மரணம்.

கும்பகோணம் முதலிய தென்னாடுகளில் சப் ஜட்ஜியாயிருந்து பென்ஷன் பெற்றுக்கொண்டு மைலாப்பூரில் சுகவாசஞ்செய்துக்கொண்டுவந்த மிஸ்டர் சூரி அய்யர் சென்ற டிஸம்பர்மாதம் 29-ந்தேதி இறந்து போய்விட்டார். இவருக்கு சென்ற டில்லி தர்பாரில் மாக்ஷிமைதங்கிய மகாராஜா அவர்களால் யோக்கிதாம்ச சர்ட்டிபிகேட் கொடுக்கப்பட்டது.

---

## Accident to a Steamer.

### ஒரு ஸ்டீமர் விபத்து.

டாஸ்மேனியா என்னும் ஸ்டீமர் பாட்பூல் என்ற குடாக்கடலில் தரைதட்டிப் போயிருக்கிறதாகவும் 15 அடி ஜலம் ஸ்டீமருக் குள்ளிருப்பதாகவும் ஸ்டீமரிலிருந்து தந்தியில்லா சமாசாரம் வந்திருக்கிறது.

---

## Death of a Ranee.

### ராணியின் மரணம்.

ஸ்வீடன் தேசத்து ராணி சென்ற டிசம்பர் மாதம் 30-ந்தேதி இறந்துபோய் விட்டார்.

---

## Aviator.

### பறக்கிறவர்.

ஆகாய கப்பலில் ஏறி பறப்பதில் பிரசித்தி அடைந்திருக்கும் மான்ஷியர் ரீவடரீன்ஸ் என்பவர் பறந்து கேப்ரோவிற்கு வந்திறங்கியிருக்கிறார். இவ்விடமிருந்து ஆசியா மைனர் இந்தியா, இண்டு சைனீஸ் பெனின்சலா, ஈஸ்ட் இண்டீஸ் ஆஸ்டிரேலியாவுக்குப் பறந்து ஆகவே உலகத்தை சுற்றிப் பறக்கப்போக தீர்மானித்திருப்பதாக சொல்லப்படுகிறது.

---

## Turkey and Greece.

### துருக்கியும் கிரீசும்.

துருக்கி உலகத்தில்பலமான சண்டைக்கப்பல்களுள் ஒன்றாக எண்ணப்படும் ஒருபாரிபோர்க்கப்பலை வாங்கி அதற்கு 'சுல்தான்' என்று நாமம் சூட்டியிருக்கிறது. இதன் விலை 30 லக்ஷம் பவுன் முதல் 40 லக்ஷம் பவுன் என்று விலை மதிப்பிடக் கப் படுகிறது. முதல் தவணைக்கு பிரான்ஸ தேசத்தில் கடன்வாங்கி செலுத்தியிருக்கிறது இதை வாங்கியிருப்பதின் கருத்தென்ன வென்றால் கிரீஸ் தேசத்துடன் சண்டை நேரிட்டால் அதில் ஜெயம்பெற வேண்டுமென்பதே. கிரீஸ தேசத்தாரும் தனதுடைய சமுத்திர சைனியங்களை பலப்படுத்திக்கொண்டு சண்டைக்குத் தயாராயிருப்பதாகவும், ஈஜின் தீவுகளில் வருகிற ஏப்ரல் மாதம் யுத்தம் நடக்கும்போலிருக்கிறதென்றும் துருக்கி வாங்கியிருக்கும் போர்க்கப்பல் சண்டை சமயத்தில் துருக்கிக்கு உபயோகப்படாதபடி அது புறப்பட்டு வருவதை தடுக்க கிரீஸ ஆரசாங்கத்தார் ஏற்பாடுசெய்துகொண்டிருப்பதாக தந்தி சமாச்சாரங்கள் நமக்கு எட்டி யிருக்கின்றன.

---:(*):---

## Dredger.

### மண் எடுக்கும் கப்பல்.

கட்டப்பட்டு வருகிற கொச்சி துறைமுகத்தில் மண் எடுப்பதற்காக மன்னர் என்று சொல்லும்படியான மண் எடுக்கும் கப்பல் கொச்சிக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

---

## Legislative Council.
### சட்ட சபை.

நிகழும் 27ந் தேதி சென்னை போர்ட் செண்ட்ஜார்ஜ் கோட்டையில் ஒரு சட்டசபை மீடிங் நடத்தப்பட்டது.

---

## H. E. The Governor.
### சென்னை கவர்னர்.

கனம் பொருந்திய கவர்னர் அவர்கள் நிகழும் 21ந்தேதி செங்கற்பட்டு போய் அவ்விடமிருந்தபடி சதுரங்கப்பட்டணம் போய் 22ம் தேதி சென்னைக்குத்திரும்பி வந்தார்கள்.

---

## Egyptian Prince.
### ஈஜிப்ட் ராஜ குமாரன்.

ஈஜிப்ட் தேச அரசராகிய கிடிவின் மைத்துனர் இந்தியாவைச் சுற்றிப்பார்க்க பம்பாய் துறைமுகத்தில் சென்ற டிஸம்பர் மாதம் 30-ந்தேதி வந்திறங்கினர். இவர் பக்ஷிவேட்டையாடுவதில் சமர்த்தராம் இந்தியா காடுகளிலும் வேட்டையாடுவாராம்.

---

## Railway Strike.
### ரேயில் வேலைக்காரர்கள் கட்டுப்பாடு.

அப்பர் பர்மாவிலிருக்கும் மிட்டின்ஞ் என்னும் ஊரிலுள்ள ரயில் வொர்க்ஷாப்பில் வேலை செய்பவர்கள் கட்டுப்பாடுசெய்து கொண்டு வேலைக்குவராமல் நின்றுபோய் விட்டார்கள். காரணம் சம்பளம் பிடித்தம்.

---

## Lady Typist.
### ஸ்திரீ டைப்பிஸ்ட்.

டைப் அடிக்கிற லேடி அழகாயிருந்தால் அவளுடன் கூட ஆபீஸில் உத்தியோகம பார்த்து வருகிறவர்கள் அவளைப்பார்த்துக்கொண்டே யிருந்து வேலையைத் துரிதபடுத்தாமல் தாமதப்படுத்துகிறார்களாம். ஆதலால் அழகு செய்து கொள்ளுவதில் மிதமாயிருக்கும் ஒரு ஸ்திரீ டைப்பிஸ்ட் தேவையென்று சீமை பத்திரிகையில் ஒரு விளம்பரம் போடப்பட்டிருக்கிறது.

---

## Lady Lawyers.
### ஸ்திரீ லாயர்கள்.

சில மாதங்களுக்கு முந்தி இங்கிலாண்டில் நடந்த ஒரு வியாஜ்ஜியத்தில் ஸ்திரீகள் லாயர் படிப்பை அடைந்து சட்டபரிக்ஷைகளில் தேறி சர்ட்டிபிகேட்டுகள் பெற்றிருந்தவர்களாக விருந்தபோதிலும் அவர்கள் லாயர் தொழில் நடத்தும்படி விடப்படகூடா தென்று தீர்மானிக்கப்பட்டது.

---

# MADRAS MARKET REPORTS.

## சென்னை மார்க்கட் ரிப்போர்ட்டுகள்.

## (இவ்விஷயம் அடுத்த மாத சஞ்சிகையில் காண்க)

### இந்தியாவின் விருத்தி.

**தங்கசாலையின் தாத்பரியமும் உபயோகமும்.**

[கராச்சி ஐரோப்பிய வர்த்தக சங்கத்தின் பிரஸிடெண்டு ஆனரபில் மிஸ்டர் M. De P. வெப் எழுதியதின் மொழி பெயர்ப்பு],

**இந்தியாவினுடைய பணம் இந்தியாவுக்கே.**

செல்வமுண்டாவதற்கு நான்கு விஷயங்கள் அவசியம். அவற்றுக் தகுந்த பொருள்தேவை யிருக்கவேண்டும்; அதை நிரப்பிக்கொள்ளும்படி வேலைசெய்யத் தகுந்த வஸ்துக்களிருக்க வேண்டும்; இதற்குவேண்டிய தொழிற் சக்தியும் கைம்முதலும் இருக்கவேண்டும். 31,50,00,000 ஜனத்தொகை யிருப்பதாலும், சத்து நிறைந்ததும நீர்வளமுள்ளதுமான பூமிகள் எண்ணிறந்த ஏகரா இருப்பதனாலும், உலோகங்களும் விலையுயர்ந்த விவசாயப் பொருள்களும் ஏராளமாய் இருப்பதனாலும், பிரிட்டிஷ் ஏகசக்கிராதிபத்தியத்தில் மற்றெந்த பாகத்தைக் காட்டிலும். இந்தியா, தொழிற் சக்தியும், வஸ்துக்களும் பொருட்தேவையும் அதிக நன்றாய் வாய்ந்ததென்று சொல்லலாம். ஆனால் இந்தியாவில் கைம்முதல் நயமாய்க் கிடைக்கவில்லை. பெரிய பிரிட்டனிலுள்ள வியாபாரிகளும் கைத்தொழிலாளிகளும் நூற்றுக்கு 3, 4, அல்லது 5 வட்டிக்குக் கடன்வாங்கிய கைம்முதலைக் கொண்டு வேலைசெய்துவர, இந்தியாவிலுள்ள வியாபாரிகள் நூற்றுக்கு 6, 8 அல்லது 10 வட்டி கொடுக்கவேண்டி யிருக்கிறது. உண்மையில், சில காலங்களிலும், சில விடங்களிலும், நிர்ப்பந்தமா யிருக்கும்போது அடிக்கடி இதற்குமேலும் வட்டி கொடுக்க வேண்டி யிருக்கிறது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், இந்தியாவினுடைய நாணய ஏற்பாடு நயமான கைம்முதல் இறக்குமதியாவதற்குச் சௌகரியமா யிருப்பது அதிக அவசியமாயிருக்கிறது. அப்படி யல்லாமல் இந்தியாவில் வழங்கும் நாணய ஏற்பாடுகள் இதற்கு மாறான காரியஞ் செய்திருக்கின்றமையால், இந்தியாவுக்கு இரண்டுவித கஷ்டங்களுண்டாயிருக்கின்றன. இந்தியாவுக்கு வெளியிலிருந்து கைம்முதல் நயமா யிறக்குமதியாவது தடைப்பட்டதே யல்லாமல், இந்தியாவிலேயே இந்தியாவுக்காக உபயோகப்படுத்தி யிருக்கக் கூடிய மிகுதியான கைம்முதலும் அதிக பாகம் இந்தியாவிலிருந்து அநியாயமாய் வெளிக்கொண்டு போகப்பட்டு, இங்கிலாந்தில் அந்நிய தேசத்தாருடைய சௌகரியத்துக்கும் இலாபத்துக்குமாக உபயோகப்பட்டு வருகிறது.

இந்த இரண்டுவித கஷ்டத்தை விளக்குகிறேன் கேளுங்கள். இந்தியாவினுடைய நாணயம் பெரும்பாலும் அதிக மதிப்பு கொடுக்கப்பட்டு, கஷ்டகாலத்தில் மதிப்பு குறைந்துவிடக்கூடிய வெள்ளிச் சில்லரையா யிருப்பதனால், மேலைத் தேசத்தவர்களுக்கு பெரியபிரிட்டன் அல்லது கானடா, அல்லது ஆஸ்ட்ரேலியா, அல்லது தென் ஆபிரிக்கா இந்த தேசங்களுடைய பண ஏற்பாட்டி லிருக்கிறபடி இந்

தியாவினுடைய பண ஏற்பாட்டில் அவ்வளவு நம்பிக்கை கிடையாது. இதனால், மற்ற தேசங்களிற்போல அவ்வளவு சுளுவாய்க் கைம்முதல் இறக்குமதி யாவதில்லை. ஆகையால், பெரிய பிரிட்டனில் வட்டி வாசி விதங்கள் குறைவாயிருப்பதனால், மேலைத் தேசத்தவர்களுக்கு அடிக்கடி உண்டாகும் அனுகூலம் இந்தியாவுக்கில்லாமல் போகிறது. இது முதலாவது கஷ்டம்.

இதல்லாமல், இந்திய தங்கசாலைகளை, ஜனங்களுக்குபயோகப்படாமல் அடைத்துவிட்டதனால் சீமையில் செலுத்தப்பட வேண்டிய தொகைக்கும் அதிகமாக இந்தியாவிலிருந்து பணத்தை வெளிக்கொண்டுபோகும் அநியாயமான வழக்கத்தினால், சென்ற சில வருஷங்களில் இந்தியா ஆபீஸார், (கைம்முதல் அருமையாயிருக்கிற நாடாகிய) இந்தியாவிலிருந்து இந்தியாவினுடைய பணத்திலேயே சுமார் 40,000,000 பவுன் வெளிக் கொண்டுபோய், அந்த பணத்தில் பெரும்பாகத்தை (கைம்முதல் சுலபமாயிருக்கிற நாடாகிய) இங்கிலாந்தில், இந்தியாவில் அகப்படக்கூடிய வட்டியை நோக்குமிடத்து, இந்தியாவுக்குச் சுத்த அநியாயமென்று சொல்லும்படி, அவ்வளவு தாழ்ந்த வட்டிக்கு மறுபடி கொடுத்திருக்கிறார்கள்.

இந்தியாவினுடைய குவியல்களும் மிகுதிப்பணமும் இந்தமாதிரி அநியாயமாய் வெளிக்கொண்டு போகப்படுவதைக் கண்டுபிடிப்பதற்கு ஜனங்கள் அதிக கஷ்டப்படவேண்டியிருந்தது. 1898-ம் வருஷத்திய பௌலர் கமிட்டியார் தங்கத்திலேயேவைக்கப்படவேண்டுமென்று சிபார்சு செய்த தங்கப்பண முழுமையும். இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு வெளிக்கொண்டு போகப்பட்டு, (a) பவுன் 16000000 பிரிட்டிஷ் பொறுப்பும், குடியேறிய நாட்டுப் பொறுப்புமாக வைக்கப்பட்டிருக்கிறதென்றும், (b) 2000000 பவுன் முதல் 6000000 பவுனுக்கு மேல் லண்டனில் பெருத்த சாவ்காரிகளுக்கு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அனேக ஜனங்களுக்குத் தெரியும். இவையெல்லாம் இந்தியாவினுடைய நன்மைக்கு அதிக விரோதமானவை. இதல்லாமலும் இந்தியாவினுடைய காகித நாணய கிரக்கிலும்—இந்தப்பணம் காகித நாணயத்திற்குப் பணம் செலுத்துவதற்காக இந்தியாவிலேதான் கிரமப்படி உபயோகிக்கப்படலாம்—பவுன் 6,000,000 பணம் இப்பொழுது லண்டனுக்கு மாற்றப்பட்டிருக்கிறதென்று அனேக ஜனங்களுக்குத் தெரிந்திருக்கும். இந்தப்பணத்தில் மிகுதியை—15000000 முதல் பவுன் 18000000-வரை இந்தியாவில்பொக்கிஷங்களிலிருந்து வெளிக்கொண்டுபோய் லண்டனில்பாங்கிகளுக்கும் சாவ்காரிகளுக்கும் பொறுப்பின்பேரிலும் பொறுப்பில்லாமலும் கடன் கொடுத்திருக்கிறார்கள்.

இந்தியாவினுடைய பணத்தில் இவ்வளவு பெரும் பாகத்தைக் கடனாக வாங்கி யனுபவித்து வரும் லண்டனிலுள்ள பெருத்த சாவ்காரர்களில் பத்து கம்பெனிகள் குறைந்தது சென்ற ஐந்து வருஷங்களாக இந்தியாவினுடைய மிகுதிப் பணத்தில் ஒவ்வொன்றும் வருஷம் சுமார் பத்து லட்சம் பவுனை வாங்கிக்கொண்டிருப்பதை நாம் தெரிந்துகொள்ளலாம். இந்த சிரேஷ்டமான பத்து கம்பெனிகளுடைய பெயர்களும் என்னவென்றால் :—அலெக்ஸாண்டெர்ஸ் அண்டு கோ 1908—முதல் வருஷத்தில் சுமார் 1,000,000 பவுன் வாங்கித் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்.

ப்ரைட்வென் அண்டு கோ 1908 முதல் வருஷத்தில் சுமார் பவுன் 1300000 கடன் வாங்கித் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்.

ப்ரிஸ்டோ அண்டு ஹெட் 1908 முதல் வருஷத்தில் சுமார் 900000 பவுன் கடன் வாங்கித் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்.

கன்லிப் ஆர். லஸ்ஸ் அண்டு கோ, 1908 முதல் வருஷத்தில் சுமார் 1000000 பவுன் கடன் வாங்கித் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்.

ஹோலர் அண்டு கோ. 1908 முதல் வருஷத்தில் சுமார் 1200000 பவுன் கடன் வாங்கித் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்.

ஹாப்கின்ஸ் அண்டு ஜைல்ஸ் 1908 முதல் வருஷத்தில் சுமார் 1300000 பவுன் கடன் வாங்கித் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்,

ரீவ்ஸ், உவிடபர்ன் அண்டு கோ. 1908 முதல் வருஷத்தில் சுமார் 1400000 பவுன் கடன் வாங்கித் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்.

சாமுவேல் மாண்டேகு அண்டு கோ. 1908 முதல் வருஷத்தில் சுமார் 2000000 பவுன் கடன் வாங்கித் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்.

ஷெப்பர்ட்ஸ் அண்டு கோ. 1908 முதல் வருஷத்தில் சுமார் 1000000 பவுன் கடன் வாங்கித் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்.

உவெட் ஜெப்பர்ளன் அண்டு கோ. 1908 முதல் வருஷத்தில் சுமார் 1500000 பவுன் கடன் வாங்கித் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள்,

இவர்களெல்லாரிலும் மெஸ்ஸர்ஸ் சாமுவேல் மாண்டேகு அண்டு கம்பெனியாரே அதிக அதிர்ஷ்டசாலிகளென்று தெரியவரும். சென்ற ஐந்து வருஷங்களாக இந்தியாவினுடைய மிகுதிப பணத்தில் வருஷத்தில் சுமார் 2000000-க்கு சாஸ்வித கடனைப்பெற்று வந்திருக்கிறார்களென்று வெளிப்படையாய்த் தெரிகிறது.

இந்தக் கடன்கள் குறைந்த காலங்களுக்குக் கொடுக்கப்பட்டு வேண்டியபோது திருப்பி வாங்கி விடக்கூடியவை யாகையால் குறைந்த வட்டிக்குக் கொடுக்கப்பட்ட "சொற்பகால"க் கடன்களென்பதையும் ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். அடிக்கடி நூதன கடன்கள் கொடுப்பதனால், இந்தக் குறைந்த காலக்கடன்கள் இப்பொழுது குறைந்தது ஐந்து வருஷத்து (இந்தக்கெட்ட வற்பாட்டால், முன்னே காட்டியபடி இந்தியா பணவிஷயங்களில் பாரவஸீகம் சீனம் முதலிய தேசங்களுக்குச்சமானமாய் விடுகிறது) இந்தியா அந்நியதேச வர்த்தகத்தில் தனக்குச் சேரவேண்டிய ஜாஸ்தி தொகையை இங்கிலாந்தும் தற்காலம் நாகரீக மடைந்திருக்கிற இதர தேசங்களும் பெறுவதுபோல் பொதுவான தங்கசாலை மூலமாகத்தானே பெறாமல் இந்தியா ஆபீஸார் பிரவேசித்து இந்தியா தனக்குச் சேரவேண்டிய தொகையைச் சிறந்த நாணயமாகப் பெறவொட்டாமல் செய்து? விலைகுறைந்து கொண்டுவரும் வெள்ளிச் சில்லரைகளை வாங்கிக்கொள்ளும்படி செய்து வருகிறார்கள். இப்படி செய்வதல்லாமல், இந்தியாவிலிருக்கும் மிகுதிப் பணத்திலும் குவியல்களிலும் பவுன் 4000 000 இந்தியா ஆபீஸார் வெளிக்கொண்டுபோய் விட்டிருக்கிறார்கள். இது இரண்டாவது கஷ்டம்.

கடைசியாகச் சொன்ன இந்தக் கஷ்டத்தை பின்னும் விளக்கவேண்டும். இந்தியாவில் ரூபாய்களைப்போல சவரன்களும் சட்டப்படி செலாவணியாகக் கூடியவை(சவரன்களே உலகத்தில் அதிகச் சிறந்ததும் அதிக விஸ்தாரமாய் வழங்கி வருவதுமான நாணயங்கள்) சவரன்களை யிறக்குமதிசெய்ய வேண்டுமென்று இந்தியா விரும்பினால், அப்படிச் செய்துகொள்வதற்கு பாதொரு தடையுமில்லையென்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கலாம். ஆனால் தடையிருக்கிறது. ல்ண்டனில் இந்தியா ஆபீஸார் வாரந்தோறும் "இந்தியாவுக்குச் சவரனை யேற்றுமதி செய்யப்பிடிக்கும் செலவைவிடத் தாழ்ந்த விலைக்கு

கல்கத்தாவிலோ, பம்பாயிலோ, சென்னைப்பட்டணத்திலோ, பதினைந்து ரூபாய் கொடுக்கும்படி விற்க இந்த ஆபீஸார் சித்தமாயிருக்கையில் இந்தியாவில் ரூபா 15க்கே சட்டப்படி செலாவணியாகத்தக்க சவரன்களை இந்தியாவுக்கு ஏன் அனுப்பவேண்டும்?’’ என்கிறார்கள். முடிவில், ஒவ்வொருவரும் தங்கள் வேலைமேல் கண்ணாயிருக்கிறபடியால், பண மாற்றல் பாங்கிக்காரர்களும் இதர மனுஷர்களும் இந்தியாவுக்கு சவரன்களை யேற்றுமதி செய்வதனால் உண்டாகும் ஜாஸ்தி செலவுகளாகாமல், இந்தியா ஆபீஸார் சொல்வதை யங்கீகரித்து இந்தியாவில் கொடுக்கும்படி ரூபாய்களை வாங்கிக்கொள்வது ஆச்சரியமல்லவே.

இந்தியா ஆபீஸார் ஏன் இப்படிச் செய்யவேண்டும்? சீமையில் செலுத்தப் படவேண்டிய தொகைகளே யிதற்கு முக்கிய காரணம். உலகத்திலுள்ள அனேக இதரதேசங்களைப்போலவே, இந்தியாவும் (இந்தியா துரைத்தனத்தார் வாய்க்கால்களுக்காகவும், இருப்புப் பாதைகளுக்காகவும், இன்னும் இலாபந் தரக்கூடிய இதரவேலைகளுக்காகவும் வாங்கப்பட்ட) கொஞ்சம் கைம்முதலை பெரிய பிரிட்டனுக்குக் கொடுக்கவேண்டி யிருக்கிறது. இதல்லாமல் இராஜாங்கத்திலும் இராணுவத்திலும் உத்தியோகமாயிருந்தவர்களுக்குக் கொடுக்கவேண்டிய உபகாரச் சம்பளங்களும், இராசாங்கம் சரியாய் நடந்துவரும் பொருட்டு அவசியமாய்க் கொடுக்க வேண்டிய தொகைகளும் இருக்கின்றன. மொத்தத்தில் இப்படி சீமையில் செலுத்தப்படவேண்டிய தொகைகள் வருஷத்தில் 15,17000000 பவுன் ஆகிறது. இதரதேசங்களுக் கிருக்கிற கடனோடொப்பிட்டால் இது அதிக குறைச்சலாயிருக்கிறது. இந்தத் தொகைகளைச் செலுத்துவதற்கு வேண்டிய தொகையை இந்தியா துரைத்தனத்தார் வரியாக வசூல் செய்ய அந்தப்பணத்தைத் தான் பிரதி புதன்கிழமையும் லண்டனில் இந்தியா ஆபீஸார் ஏலம் போடுகிறார்கள். லண்டனில் வாங்குபவர்கள் இந்தியா ஆபீஸாருக்கு இங்கிலீஷ் நாணயத்தைக் கொடுத்து அதற்குப் பதிலாக கல்கத்தாவிலும் பம்பாயிலும் சென்னைப்பட்டணத்திலும் போய் வாங்கிக் கொள்ளுகிறார்கள். சீமையில் செலுத்தப் படவேண்டிய தொகைகளைக் கொடுப்பதற்காக இந்தியா ஆபீஸாருக்கு லண்டனில் பணம் கட்டாயமாயிருக்கிறபடியால் தங்களால் எத்தனை ரூபாய்களை விற்கக்கூடுமோ அத்தனை ரூபாய்களை விற்கவேண்டுமென்று இந்தியா ஆபீஸ் உத்தியோகஸ்தர்கள் முயற்சி செய்கிறார்களென்று தெரிந்து கொள்ளலாம். இதனால் இந்தியா ஆபீஸார் அடிக்கடி ரூபாய்களைக் குறைந்த விலைக்கு (அதாவது, இந்தியாவில் சவரன்களை யிறக்குமதி செய்வதற்குப் பிடிக்கும் செலவைக்காட்டிலும் குறைந்த விலைக்கு) விற்கக் காரணம் விளங்குகிறது. சீமையில் செலுத்தப்படவேண்டிய தொகைகளைக் கொடுப்பதற்குப் போதுமான தொகை லண்டனில் கையில் தயாராயிருக்கவேண்டுமென்ற விருப்பத்தால்தான். சீமையில் செலுத்தப்படவேண்டிய தொகையை மாத்திரம் இந்தியாவிலிருந்து வெளிக்கொண்டு போவதோடு நிறுத்தவில்லை. பணத்துக்குக் கிரமமாய் யாதொருதேவையும் இல்லையென்றாலும் இந்தியா ஆபீஸார் ரூபாய்களைக் குறைந்த விலைக்கு விற்பதை நிறுத்தவில்லை. ஆகையால் ஒரு வருஷத்தில், தங்களுடைய உத்தேசத் தேவைகளுக்குமேல் 14300000-பவுன் வாங்கப்பட்டிருக்கிறது. இப்படிக்கு—ஒருவேளை அதற்கு மேலுமிருக்கலாம்—ப்ரவப்பட்டிருக்கின்றன.

இதுவரையில் சொல்லி வந்ததிலிருந்து இந்தியாவினுடைய பணத்தை வாஸ்தவத்தில் வெளிக்கொண்டு போகிறார்களென்றும், இந்தியாவினுடைய நன்மையைக் கருதி, இதை உடனே

நிறுத்தவேண்டுமென்றும் தெரியும். கைம்முதல் நயமாய் அகப்படாமற் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற இந்தியாவில் அதிர்ஷ்ட வசமாயிருக்கும் பணத்தொகைகளையும் அகப்படாமற் செய்துவிடக்கூடாது. அப்படி செய்யாமல், அறியாதவர்களும், பழையவழக்கங்களை வைத்துக்கொண்டிருப்பவர்களுமான நாட்டுப்புறத்து ஜனங்களால் தங்களுடைய வீடுகளிலும் களஞ்சியங்களிலும் குவித்து வைக்கப்பட்டிருந்தாலும் சரி, அல்லது எல்லாமறிந்து நாகரீகமடைந்திருக்கும் துரைத்தனத்தாரால் தங்களுடைய துரைத்தன பொக்கிஷங்களில் குவித்து வைக்கப்பட்டிருந்தாலும் சரி (கொஞ்சநாளைக்கு முன் பவுன் 30000000 வரையில் ஜாஸ்தி பணம் வைத்துக்கொண்டிருந்த இந்தியா துரைத்தனத்தாரே எல்லாரிலும் அதிகமாகக் குவித்து வைத்திருக்கிறவர்களாவர்) இந்தத் தொகைகளை ஜனங்களின் பொது நன்மைக்காகப் புத்தியோடுபயோகிக்க வல்ல ஜனங்கள் உபயோகிக்கும்படி கொடுத்துவிடவேண்டும். அல்லது அவர்களுக்குக் கடனாகக் கொடுக்கவேண்டும். இந்தியநாட்டு ஜனங்களுக்குப் போதனை செய்து அவர்கள் தங்களுடைய மிகுதிப்பணத்தைத் தங்களுடைய வீட்டிலேயே குவித்து வைத்துக் கொண்டிருப்பதன் பிரதிகூலங்களை விளக்குவது இந்தியாவிலுள்ள பொது ஜனோபகாரிகள், தேசாபிமானிகள், சாவகாரிகள், பாங்கிக்காரர்கள் இவர்களுடைய கடமையாகும் இந்தப்பணங்களை ஒரு நல்ல பாங்கில் வைத்தால், அப்படி வைத்தவர்களுக்கு வட்டி வருவதேயல்லாமல் இந்தியாவில் எல்லாவித வேலைகளும் விருத்தியாகும்படி அந்த மூலதனத்தை பாங்கிக்காரரும் உபயோகிக்கச் சாதனமாகும். இப்படிசெய்வதனால் இந்தியாவுக்கு அதிக அனுகூலமுண்டாகும் துரைத்தனத்தாரும் வழிகாட்ட ஆரம்பித்து, பின்வருகிற வற்றைச் செய்யலாம்.—

(1) இந்தியாவிலும் உலகத்தில் இதரதேசங்களிலுமிருக்கிற ஜனங்களுக்கு நம்பிக்கைக்கிடமாகும்படி பொதுவானதும் கிரயமில்லாததுமான தங்கசாலைகளையும், பூரண மதிப்புள்ள தங்க நாணய ஏற்பாட்டையும் ஸ்தாபித்தல்;

(2) இந்தியாவினுடைய பணத்தை இந்தியாவிலிருந்து அநாவசியமாய் வெளிக்கொண்டு போவதை நிறுத்தி, இங்கிலாந்தில் செலுத்தப்பட வேண்டியதற்கு மேல் இங்கிலாந்துக்கு கொண்டு போகாமல் நிறுத்துதல்;

(3) வரியைக்குறைத்து, தற்காலம் பொக்கிஷங்களில் அதிக ஜாஸ்தியாய்ச் சேர்ந்துவிட்டிருக்கிற தொகையைச் சரியாய் உபயோகப்படுத்தி அதைத்தகுந்தபடி குறைத்தல்; அதற்ள்,

(4) பொக்கிஷங்களில் ஜாஸ்தியாயிருக்கும் பணத்தை இத்தனை நாளாக லண்டனிலிருக்கும் பாங்கிகளுக்கும் சாவ்காரி கம்பெனிகளுக்கும் கொடுத்து வந்த வட்டிக்கே, அல்லது அதற்கு மேலான வட்டிக்கோ பொறுப்பின் பேரிலோ, பொறுப்பில்லாமலோ, கொஞ்ச காலத்துக்கோ அல்லது நெடுங்காலத்துக்கோ இந்தியாவிலுள்ள முக்கிய பாங்கிகளுக்கும் சாவ்காரிக் கம்பெனிகளுக்கும் தாராளமாய் கடனாகக் கொடுத்தல்.

இப்படி செய்வதினால், தற்காலம் இந்தியாவுக்குப் பண விஷயமாக விருக்கும் கஷ்டங்களெல்லாம் நிவர்த்தியாகக்கூடும் இதனால் இந்தியாவுக்கு வெளி தேசங்களிலிருந்தும், தன்னுடைய குடிகளிடத்திலிருந்தும், அவசியமாய் வேண்டியிருக்கும் மூலதனம் தகுந்த வட்டிக்கு இன்னும் அதிகமாகக் கிடைத்துக் கொண்டிருக்கும். இதுவல்லாமல், பொதுவானதும், கிரயமில்லாததும் தானே சரிப்படுத்திக கொள்வது

மான தங்கசாலை பிராததனால் இப்பொழுது நடந்து வருகிறபடியால்லாமல, இந்தியாவினுடைய பணம் இந்தியாவிலேயே இந்தியாவிற்காகவே உபயோகிக்கப்பட்டுவரும்.—

சுதேசமித்திரன்.

---

## கைமாறிச் செல்லத்தக்க ஆதரவுகளைக் குறித்த 1881–வருஷத்து ஆக்டைப் பின்னும் திருத்துவதற்கான மசோதா.

---

டெல்லி, 1913-ம் ஞு டிசம்பர்மீ 12உ

71.—கவர்னர் ஜெனரல் அவர்களுடைய ஆலோசனைச் சபையில் சட்ட நிருபண வேலை நடந்தேறுவதைக் குறித்த விதிகளில் 23-வது விதியின்படி, கவர்னர் ஜெனரல் அவர்கள் மேலே கண்ட மசோதா ஆக்டையும், அது பிறப்பதற்குச் சம்பந்தமான ஹேதுக்களும் நோக்கங்களும அடங்கிய குறிப்பையும் இந்தியா கெஜட்டிலும் அவ்வவ்விடத்திய கெஜெட்டுகளிலும் இங்கிலீஷில் பிரசித்தஞ் செய்யும்படி களிகூர்ந்து கட்டளையிட்டிருக்கிறார்கள்; அந்த மசோதா ஆக்டும் அது பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும் அடங்கிய குறிப்பையும் யாவர்க்கும் தெரியும்படியாக அப்பிரகாரமே இதனால் பிரசித்தஞ் செய்யப்படுகின்றன:—

சில வகைகளைச சேர்க்க கைமாறிச் செல்லத்தக்க ஆதாரவுகளைச் செய்வதும் எண்டார்ஸ் பண்ணுவதும் சட்டப்படி செலாவணியாகுமா என்பதைக் குறித்து உண்டாகும சந்தேகங்களை நிவர்த்திக்கும்பொருட்டு, கைமாறிச் செல்லத்தக்க ஆதாரவுகளைக் குறித்த 1881-ம் வருஷத்து ஆக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால்; இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால்:—

1. சுருக்கமான பெயர். இந்த ஆக்டை, கைமாறிச் செல்லத்தக்க ஆதரவுகளைக் குறித்த 1911-ம் வருஷத்து (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

2. 1881-ம் வருஷத்து 26–வது ஆக்ட் 13-வது பிரிவில திருத்தம. (இதில் பினனால் மேற்படி ஆக்ட் என்று சொல்லப்படும்) கைமாறிச் செல்லத்தக்க ஆதாரவுகளைக் குறித்த 1881-ம் வருஷத்து ஆக்ட் 13-வது பிரிவில் "13" என்னும் இலக்கத்துக்குப் பிறகு "(1)" என்னும் இலக்கத்தையும் அடைப்பான்களையும் அமைத்துக்கொண்டு அதே பிரிவுடன் அடியிற்கண்ட உட்பிரிவைச் சேர்த்துக்கொள்ளவும். அதாவது:—

"(2) யாதொரு கைமாறிச் செல்லத்தக்க ஆதாரவுக்குக் கூட்டாய் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட (தொகை) செலுத்தப்படுகிறவர்களிடத்து தொகை செலுத்தும்படி செய்யலாம். அல்லது செலுத்தப்படுகிறவர்கள் இருவராய் இருக்கிற பட்சத்திலே அவர்களில் ஒருவரிடத்தில் இல்லாவிட்டால் இன்னொருவரிடத்திலாவது, செலுத்தப்படுகிறவர்கள் பலராய் இருக்கிற பட்சத்திலே அவர்களில் ஒருவரிடத்திலாவது, இல்லாவிட்டால் சிலரிடத்திலாவது அதற்குத் தொகை செலுத்தப்படும்படி செய்யலாம."

(3) 1881-ம் வருஷத்து 26-வது ஆக்ட் 16-வது பிரிவில் திருத்தம். மேற்படி ஆக்ட் 16-வது பிரிவில "6" என்னும் இலக்கத்துக்குப் பிறகு "(1)" என்னும் இலக்கத்தையும் அடைப்பான்களையும் அமைத்துக்கொண்டு, அதே பிரிவுடன் அடியிற்கண்ட உட்பிரிவைச் சேர்த்துக்கொள்ளவும். அதாவது:—

"(2) (தொகை) செலுத்தப்படுகிறவருக்குச் சம்பந்தமாக இந்த ஆக்டிற் கண்ட நிபந்தனைகள் இண்டார்ஸ் செய்யப்பட்டவருக்கு அவசியமான மாறுதல்கள் சகிதமாய்ப் பிரயோகப்படும்."

---

## இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

---

கைமாறிச் செல்லத்தக்க ஆதரவுகளுக்கு முக்கியமாய்க் கவர்ன்மெண்ட் ப்ராமிஸரி நோட்டுகளுக்குக் கட்டாய் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட (தொகை) செலுத்தப்படுகிறவர்களிடத்திலாவது, செலுத்தப்படுகிறவர்கள் பலராய் இருக்கிற பட்சத்திலே அவர்களில் ஒருவரிடத்திலாவது ஒருவரிடத்திலில்லாவிட்டால் சிலரிடத்திலாவது தொகை செலுத்தப்படும்படியாக அவைகளை எண்டார்ஸ் செய்வது இந்த தேசத்திலே வெகுகாலமாக வழக்கமாயிருந்து வருகிறது. அப்படிச் செய்யப்படும் எண்டார்ஸ்மெண்டுகள் சட்டப்படி செலாவணியாகுமா என்பதைக் குறித்துச் சந்தேகங்கள் உண்டாயிருக்கின்றன. ஆகவே, அவை சட்டப்படி செலாவணியாகும் என்னும் விஷயத்தைக் குறித்து எவ்வளவும் சந்தேகம் உண்டாகாதபடி செய்வதே இந்த மசோதா ஆக்டின் உத்தேசமாகும். இருத்தவதற்கான இந்த மசோதா ஆக்டானது செக்குகள், ப்ராமிஸரி நோட்டுகள், பில் ஆவ் எக்ஸ்சேஞ்சுகள் என்னும் மூன்றுவகையான கைமாறிச் செல்லத்தக்க ஆதரவுகளையெல்லாம் பாதிக்கும்; மேலும், இந்த மசோதா ஆக்டினால், இவ்விஷயமாய் இந்தியாவில் செலாவணியாகும் சட்டமானது இங்கிலாந்து தேசத்தில் செலாவணியாகும் சட்டத்தைப் பெரிதும் ஒத்திருக்கும்படியும் செய்யப்படும்.

---

# AGRICULTURE.

## விவசாயம்.

### சிதம்பரம் விவசாயக் கான்பரென்ஸ்.

இம்மாதம் 10-11-ந் தேதிகளில் சிதம்பரம் டிப்டி கலெக்டர் ஆபீசில் சிதம்பரம் விவசாயக் கான்பரென்சு கூடிற்று. இப்பொழுது கூடியது இரண்டாவது வருஷத்திய கான்பரென்சு ஆகும். இது சிதம்பரம் டிவிஷன் விவசாயச் சங்கம், பரங்கிப்பேட்டை மன்னார்குடி, விருத்தாசலம், திட்டைகுடி ஆகிய இத்தலங்களிலுள்ள கிளைச்சங்கங்கள் இவைகள் யாவற்றும் ஏகோபித்துக் கூடும் கான்பரென்சு ஆகும். தாசில்தார்கள் டிப்டி தாசில்தார்கள் ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் முதலான சிதம்பரம் தாலுகா ஆபீஸர்கள் யாவரும் அத்தருணம் வந்திருந்தார்கள். டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீஸரும் நமது ஜில்லா ஸப் ஜட்ஜ் மிஸ்டர் அப்பாசாமி முதலியாரும், திண்டிவனம் டிவிஷனல் ஆபீசர் மிஸ்டர் என். கோபாலசாமி அய்யங்காரும், ஆனெரி அஸிஸ்டெண்டு இன்ஜினீர் ராவ் சாஹிப் ரங்கசாமி அய்யரும், சீர்காழியில் பெரிய மிராசுதாரரும் பிரபலமான தர்ம குடும்பத்தைச் சேர்ந்த தர்மிஷ்டராயுமுள்ள மிஸ்டர் திருநாராயணம்பிள்ளையும் கூடலூர் ஐகோர்ட் வக்கீல் மிஸ்டர் வி. சீனிவாசாசாரியாரும், கூடலூர் கான்சாஹிப் மிஸ்டர் ரஜாக் மரக்காயரும், போலீஸ டிஸ்டிரிக்ட் சூபரின்டெண்டு மிஸடர் புர்னீஸ முதலிய உயர்தர உத்தியோகஸ்தர்களும் அத்தருணம் விஜயம் செய்திருந்தார்கள். விவசாய டைரெக்டரான மிஸடர் டி. டி. சாத்விக் கான்பரென்ஸைத் திறந்துவைத்து இரண்டு நாட்களிலும் அக்கிராசனம் வகித்தனர். ஒற்றை பலகு கம்போடியாப் பருத்தி தீனிப்பயிர்கள், பெருமஞ்சள், சோளம், முதலானவைகள் மாதிரிக்காக கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்தன. சென்ற வருஷம் திருப்பூர் காட்சியின்போது வாங்கின காங்கேயம் மாடுகளும் கொண்டுவந்து கான்பரென்ஸில் காண்பிக்கப்பட்டன, சிதம்பரம் டிவிஷன் ஆபீசரும் மேற்படி தாலுகா சங்கத்திற்கும் அதன் கிளைச் சங்கங்களுக்கும் சேர்மனான மிஸடர் பி. என். மகம்மது மீரான் சாஹிப் கான்பரென்சுக்கு வந்திருந்தவர்களை வரவேற்று உபசரித்தார்கள். மிஸடர் மஹம்மது மீரான் அவர்கள் விவசாய விஷயத்தைப் பற்றி சில வார்த்தைகள் பேசி பின்பு விவசாய இலாகா டைரெக்டரை கான்பரென்ஸை திறக்கும்படியாயும் அதற்கு அக்கிராசனத்தை வகிக்கும்படியாயும் கேட்டுக்கொண்டார்கள். அன்புடன் அதற்கிணங்கி அக்கிராசனாதிபதி அவர்கள் பேசத்தொடங்கி டிவிஷனல் ஆபீசராகிய மிஸடர் மகம்மது மீரான் அவர்களின் முயற்சியால் இந்தக் கான்பரென்சு ஏற்பட்டு நடைபெற்று வருகிறதென்றும், ஒற்றைபலகு நடும் முறையை முன்னுக்குக் கொணடுவந்த மிஸடர் ஆபரஹாம் பிள்ளை கான்பரென்ஸில் விஜயம் செய்திருக்கிறதைப் பார்க்கத் தமக்கு நிரம்ப சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்றும் இத்தகைய புதிய விவசாய முறைகளை அநுஷ்டித்து வரவேண்டுமென்றும் அவ்விதம் அநுஷ்டிப்பதனால் உண்டாகும் பலன் இத்தன்மைத் தென்பதையும் வற்புறுத்திப் பேசினார்கள். நமது ஜில்லா கலெக்டர் அவர்களிடமிருந்து வந்த கடிதம் ஒன்று படிக்கப்பட்டது. பின்பு மிஸடர் மீரான் சாஹிப் அவர்கள் அத்தாலுகா விவசாய சங்கத்தின வருஷாந்தர ரிபோர்ட்டை வாசித்தார். முறைப்படி சாகுபடி செய்து வருவதும் விவசாய இலாகாதாரர்களால் சிபார்சு செய்யப்படும் நூதன கருவிகளை விவசாயிகள் உபயோகப்படுத்திவருவதும் ஆகிய இவ்விரண்டு காரியங்களை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரும்படிச் செய்வதே இந்த விவசாயச் சங்கத்தின் முக்கிய நோக்கம்.

அதன்பிறகு குடியானவர்கள் பல சந்தேகங்களைக் கேட்க, அவைகளுக்குச் சரியாய் பதில சொல்லப்பட்டது. இதனுடன் முதல் நாள் கான்பரென்ஸ் முடிந்தது.

தேசாபிமானி.

# INDUSTRIES.
## கைத்தொழில்.

### கைத்தொழில் கான்பரன்ஸ்.

வருடா வருடம் காங்கிரஸ் மகாசபையுடன் கூடிவரும் கைத்தொழில் கான்பிரசின் 9-வது கூட்டம் சென்ற டிசம்பர் மாசம் 25உ கராச்சியில் கூடினது. தேசத்தின் பல பாகங்களிலிருந்து அனேக பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அனேகம்பேர் வேடிக்கைபார்க்கவும் வந்திருந்தார்கள். பம்பாயிலிருந்து சர்பாசல்பாய் கரிம்பாய், மிஸ்டர் ஜின்னா, முதலான பிரபுக்கள் வந்திருந்தார்கள். லாகூரிலிருந்து மிஸ்டர் லஜபட்ராய் வந்திருந்தார். மெசர்ஸ் ஈஸ்வரதாஸ் ஆசம்மா, பாகிராலா, பேடன், யூசாபால் ஆலபாய், விசினிதாஸ், பாட்டிசண்ட், சொபராஜ், செட்மால், முதலான பேர்கள் சிந்து மாகாணத்திலிருந்து வந்திருந்தார்கள்.

#### நல்வரவு கூறினது.

சிந்து மாகாணத்தைச் சேர்ந்த ஐதராபாத்திலிருக்கும் ருப்பகதூர் ஹிராநாட் கெம்சிங் உபசாரக்கமிட்டி சேர்மேனாகயிருந்து பிரதிநிதிகளுக்கு நல்வரவுகூறினபோது அடியிற்கண்டபடி பேசினார்கள். கராச்சி நகர், வியாபாரத்தில் விசேஷமான நகர் என்றும், டில்லி இந்தியாவின் பிரதான நகராய் செய்யப்பட்டிருக்கிறபடியாலும் கராச்சி அதற்கு சமீபமான துறைமுகமா யிருக்கிறபடியாலும் இனி அது விசேஷமாக கவனிக்கப்படடும். வடஇந்தியாவில் பயிராகும் தானியங்கள் இந்த துறைமுகத்தின் வழியாகத்தான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவேண்டும். ஐரோப்பிய சாமான்கள் இத்துறைமுகத்தின் வழியாகத்தான் இந்தியாவிற்குள் நுழையவேண்டுமென்று சொன்னார். ஆனால் இந்நகரில் கைத்தொழில் முயற்சி மட்டிலும் இருளடர்ந்திருக்கிறது. ஏன் என்றால் இந்த சிந்து மாகாணத்தில் யாதொரு பஞ்சாலையும் கிடையாது; கரும்பாலையும் கிடையாது. யாதொரு தோல் பதனிடும் சாலையும் கிடையாது. துறைமுகப் பட்டணமா யிருக்கும் கராச்சியில் கைத்தொழில் ஸ்தாபனங்கள் குன்றியிருப்பது விசனிக்கக்கூடியதாயிருக்கிறதென்று சொன்னார். கைத்தொழில் ஸ்தாபனங்கள் இந்நகரில் ஏற்பட்டால் இதன் வியாபாரம் இரட்டிப்பு மடங்கு அதிகரிக்கும். இந்த சபை இவ்விடம் கூடியிருப்பது கைத்தொழில் முயற்சி இம்மாகாணத்தில் செய்யப்பட கவர்ன்மெண்டாரையும் ஜனங்களையும் தூண்டுமென்று தாம் நினைப்பதாகச் சொன்னார். ஷிக்காப்பூரில் கைத்தறிக ளிருக்கின்றன. இவைகளில் பட்டுத்துணிகள் செய்யப்படுகின்றன. ஏழைகள் உபயோகிக்கும்படியான மட்ட கெட்டி வேஷ்டிகளும் நெய்யப்படுகின்றன. வெளி கிராமங்களிலிருக்கும் நெசவுக்காரர்கள் ஐரோப்பாவில் செய்யப்பட்ட கைத்தறிகளை உபயோகப்படுத்த இன்னும் ஆரம்பிக்கவில்லை.

அப்படி யிருந்தபோதிலும் மிகவும் நேர்த்தியான படுக்கை விரிகளையும் "கார்பி" என்று சொல்லும்படியான கால் சராய்களையும் தயார் செய்கிறார்கள். டாட்டா கம்பெனி நெசவுகாரர்கள் நேர்த்தியான "லுங்கிகள்" தயார் செய்கிறார்கள். சிந்து மாகாணத்தில் நேர்த்தியான தொட்டில்கள் செய்யப்படுகின்றன. இவைகள் மாதிரி நேர்த்தியானவையாக வேறெவ்விடத்திலும் அகப்படா. இவ்வளவு தொழிற்களிருந்தும் இந்தத் தொழில்கள் எல்லாம் ஹாலா என்னும் ஊரிலுள்ள சில குடும்பங்களுக்குள் அடக்கமாயிருக்கின்றன. வேறே தேவைக்குத் தகுந்தபடி சரக்குகள்

தயார் செய்ய யாதொரு பலமான ஏற்பாடும் நாளது வரையில் செய்யப்படவில்லை. சிந்து மாகாணம் ஒரு சமயம் சித்திரவேலைப்பாடமைந்த சட்டிப்பானைகளுக்குப் பேர்போனதாயிருந்தது. அந்த சித்திர வேலைப்பாடுகள் எல்லாம் அடியோடு போய்விட்டன. இப்போது செய்யப்படும் மண் பாண்டங்கள் கேவலமாயிருக்கின்றன. அத்தொழிலே க்ஷீணித்துக்கொண்டுவருகிறது. தொழிலாளிகளும் இத்தொழிலைவிட்டு ஐதராபாத்தில் செங்கல் கட்டடங்களுக்கு ஓடுகள் செய்வதில் அமர்ந்துவிட்டார்கள். சாய அச்சு வேலைகள் இதற்கு முந்தி இங்கு மும்முரமாய் நடந்துவந்தது. அந்தத் தொழிலும் இப்போது க்ஷீணமடைந்து வருகிறது.

ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மலிவான சிட்டிகள் இந்த சாய அச்சடிக்கும் தொழிலை விரட்டி விட்டன. இந்த தொழிற்களுக்கு மேல் நெல்குத்தும் சாலை, மாவு அரைக்கும் மில், பருத்திக்கொட்டைஎடுக்கும் யந்திரம், பஞ்சுப் பிரஸ் முதலிய தொழிற்சாலைகளிருக்கின்றன. சிந்து பருத்தி அவ்வளவு உயர்ந்ததல்ல. ஆதலால் சிந்து தேசத்திலிருக்கும் எந்த நெசவு சாலையும் ராஜதானியிலிருக்கும் மற்ற நெசவு சாலைகளுடன் போட்டி போட முடியாமலிருக்கிறது. இம்மாகாணத்தில் பயிர் செய்யப்படும் கரும்பு வெல்லமாக மாற்றப்படுகிறது. கவர்ன்மெண்டார் சர்க்கரை வியாபாரத்தைப் பாதுகாக்க உடன்படும் பரியந்தம் சிந்து மாகாணத்தில் யாதொரு சர்க்கரை தொழிற்சாலையும் ஸ்தாபிக்கப்பட மார்க்கமில்லை. தோலைப் பதனிடும் தொழிலும் இவ்விடத்தி லிருப்பவர்களுக்குத் தெரியாது! தோல் சாமான்களைச் செய்யவும் தெரியாது. இந்த சமயத்தில் இந்திய வியாபாரிகள் நிச்சய வருமானமற்ற தொழில்களில் பணத்தைப் போட்டு முடக்கினதால் அநேக இந்திய பாங்குகள் முறிந்துபோய் தேசத்தின் நாணயமே அசைக்கப்பட்டு போயிருக்கிறது. சிந்து மாகாணம் கனத்த நஷ்டத்தை அடைந் திருக்கிறது. இன்னும் விபரமாய்ச் சொல்லப் போனால், பம்பாய், பஞ்சாப் ராஜதானிகளைவிட அதிகமான கஷ்டத்தை அடைந்திருக்கிறது. இப்போது அடைந்திருக்கும் திகிலிலிருந்து நம்முடைய மாகாணம் எழுந்திருக்க இன்னும் சில மாதங்கள் செல்லும். அதுவரையில் இந்தியாவின் மற்ற பாகங்களில் செய்யப்படும் கைத்தொழில் முயற்சிகளை சிந்து கவனித்துக்கொண்டு வரும்; தொழில்கள் ஆதரிக்கப்பட்டு காப்பாற்றப் படாவிட்டால் முன்னுக்கு வரமாட்டா. நம்முடைய தலைவிதி எப்படி முடியுமோ அப்படித்தான் முடியும். தென் ஆபிரிக்கா கவர்ன்மெண்டார் கடுமையான சட்டங்கள் பிறப்பித்து தொழில்களையும் வியாபாரத்தையும் பாதுகாக்கும்போது இந்தியத் தொழில்களையும் வியாபாரத்தையும் ஆதரித்துப் பாதுகாக்கும் படியாக நம்முடைய கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுவதற்குப் போதுமான நியாயமிருக்கிற தென்று சொல்லி முடித்தார்.

### சபாநாயகர் பிரசங்கம்.

மிஸ்டர் லல்லுபாய் சாமல்தாஸ் என்பவர் சபாநாயகர் ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டு அடியிற்கண்டபடி பேசினார். பஞ்சாப், பம்பாய் மாகாணத்தில் சமீபத்தில் நடந்த பாங்கி முறிவு சம்பந்தத்தைப்பற்றிப் பேசி, போட்ட மூலதனம் திரும்பவும் எடுக்கப்படும் என்கிற நிச்சயமில்லாத பிரயத்தனங்களில் ஏராளமாக முடக்கப்பட்டு போனதாலும், பங்குதார்கள் செலுத்தவேண்டிய பங்குப்பணம் காலாகாலத்தில் வசூல் செய்யப்படாமல் நிலுவையில் விழுந்துவிட்டபடியாலும், டிபாசிட்டர்களுக்கு திருப்பிக்கொடுக்க சமீபமான காலம் வாயுதாவாகவை

த்துவிட்டு அந்த டிபாசிட்பணங்களை நீண்ட காலத்தில் திரும்பிப் பெற்றுக்கொள்ள சம்மதித்து கடன் கொடுக்கப்பட்டுப் போய்விட்டபடியால் பாங்குகளில் பணக்கசாலா உண்டாகி அவைகள் முறிந்துபோய்விட்டதாகத் தெரியவருகிறதென்றும், பாங்குகள் முறிந்து போவதற்குள்ள காரணங்கள் எத்தன்மையனவாக விருந்தபோலும் இந்த சம்பவம் ஜனங்கள் ஜாயின்ட்ஸ்டாக் கம்பெனிகளில் வைத்துக்கொண்டுவந்த நம்பிக்கை அசைக்கப்பட்டுப் போய்விட்டதென்றும், இனி சிலகாலம் வரையில் இம்மாதிரி கம்பெனிகளில் நம்பிக்கை வைக்கப் பின்வாங்குவார்கள் என்றும், இந்துக்கள் பாங்கி வைத்து நடத்த இயற்கையிலேயே யோக்கியதை யற்றவர்கள் என்று சொல்லப்படுகிறதையும் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் வெள்ளைக்காரர்கள் ஸ்தாபித்த பாங்கிகள் அவர்களுடைய சொந்த தேசங்களில் முறிந்து போவதல்லாமல் இந்தியாவிலும் முறிந்து போகவில்லை யோ என்று அந்தக்கக்ஷிக்கு எதிர்கக்ஷி சொல்லப்படுவதையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார். ஜனங்கள், இந்த இரண்டு கக்ஷிகளில் எந்தக்கக்ஷியில் உண்மையிருக்கிறதென்று ஆராய தங்களுடைய புத்தியைச் செலுத்தாமல், சம்பவித்திருக்கும் தீமையைக்கொண்டு ஒரு நன்மையை அடைய தீர்மானித்து யாதொரு காபுராபடாமலும் அமரிக்கையாய் ஆலோசனை செய்து பிரயாசைப்படவேண்டுமென்று சொன்னார். ஏன் என்றால் இவ்வுலகத்தில் ஒரு துக்க சம்பவம் நேரிட்டால் அதன் பயனாக சுகம்பவம் நேரிடுவது தெய்வ எத்தனம் என்று சொன்னார். மேன்மைதங்கிய லார்ட் ஹார்டிஞ் இப்பாங்கு முறிவு சம்பவம், இனி ஜனங்கள் நல்ல ஸ்தாபனங்களில் போட்டு முடக்கும்படியாக எச்சரிக்கிறதேயொழிய மற்றப்படி வேறில்லையென்று சென்னையில் கூறினார். இந்த வார்த்தைகள் நியாயம் நிரம்பின வார்த்தைகள்! பாங்கிகள் முறிந்துபோய் ஜனங்களுக்குள் காபுரா உண்டாயிருக்கும் இந்த சமயத்தில் அப்படி எச்சரித்ததற்காக மேன்மைதங்கிய வைசிராய் அவர்களுக்கு வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொன்னார். இதன்பிறகு பாங்கித் தொழில் எப்படி நடத்துகிறதென்றும், பாங்கிகளால் செய்யக்கூடிய நன்மைகளையும், எப்பேர்ப்பட்டவர்களை டைரெக்டர்களாக பொருக்கி எடுத்து நியமிக்கவேண்டுமென்றும், அவர்களுடைய கடமைகளையும் உத்தரவாதங்களையும் எடுத்துச் சொல்லி இங்கிலாண்டில் பாங்கித்தொழில் நடத்தும் மேன்மையான விதத்தைச் சிலாகித்துப் பேசினார். பாங்கிகளில் பணம் போடுகிறவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு சட்டம் ஏற்படவேண்டுமென்றும் ஒரு கம்பெனியை முடிவுக்கு கொண்டுவருவதற்கு இப்போது அனுஷ்டிக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளில் சிலவை சீர்திருத்தப்படவேண்டுமென்றும் குறிப்பிட்டுச் சொன்னார். இந்தப்படியான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டபோதிலும் பாங்கித் தொழில் உன்னதமான நிலைமையை இந்தியாவில் அடையமாட்டாது. பங்குதாரர்கள் தங்களுடைய உண்மையான உரிமைகளையும் பாத்தியதைகளையும் அறிந்துகொள்ளாமல் அதிகப்படியான டிவிடெண்டுகளுக்கு ஆசைப்படும் பரியந்தமும், டிபாசிட்டர்கள் பர்ங்கிகளின் யோக்கிதையையும் அந்தஸ்தையும் அறிந்துகொள்ளாமல் ஜாஸ்தி வட்டிக்கு இச்சித்துப் பணத்தைப் போட்டு முடக்கும் பரியந்தமும், பாங்கியின் மானேஜர்கள் பங்குதார்களின் பாத்திதைகளை அலக்ஷியப்படுத்தி பெரிய ஆசை பிடித்து பங்குதார்களின் பணத்தை எல்லாம் சாவதானமற்ற தொழிற்களில் போட்டு முடக்கும் பரியந்தமும், பாங்குகள் ஓயாமல் முறிந்து கொண்டிருக்கு மென்

றும் எங்கு பார்த்தாலும் துன்பத்தை விளைவித்துக் கொண்டேயிருக்குமென்றும் சொன்னார். ஆகவே இப்போது செய்யப்பட வேண்டியது என்னவென்றால் டைரக்டர்களாக விருக்கும்படியும் மானேஜர்களாக விருக்கும்படியும் தயார் செய்து விடுவது போதுமானதல்ல. பாங்கியில் பணம் போட்டு லாவாதேவி செய்யும் பொது ஜனங்களையே அவர்களுடைய கடமைகள் இன்ன இன்னவை என்றும் அவர்களுடைய உத்திரவாதங்களும் உரிமைகளும் இன்ன இன்னவை என்று அறிந்து கொள்ளும்படியாக தயார் செய்து விடவேண்டும். இப்படிச்செய்தால்தான் பாங்குகள்கைத்தொழிலாலும் வியாபாரத்தாலும் உண்டாகக்கூடிய மாறுதல்களை தாங்கி ஜனங்களுக்கு நம்பிக்கை ஊட்டி டிபாசிட்டர்கள் தங்களிடம் பணத்தைப் போடும்படியாகத் தூண்டி மெதுவாக லாபத்தை உயர்த்திக்கொண்டு போகும்; பிரஸ்தாப பாங்கு முறிவுகளாலும் அவைகளில் வெளிவந்திருக்கிற சமாசாரங்களைக்கொண்டு நாம் புத்தி மயங்கிப் போய்விடக்கூடாது. ஏன் என்றால் பலபேர் செர்ந்து பரோபகார உணர்ச்சிக்கு கட்டுப்பட்டு பாங்கிகள் ஏற்படுத்தி பிரயத்தனம் செய்து வந்தால் அம்முயற்சிகளை எல்லாம் தன் சுயநன்மைக்குப் பிரயோகப்படும்படி எண்ண முடையவனு மிருக்கக்கூடும். ஆனால் அவன் அந்த சமயம்மட்டிலும் மினு மினுப்பாயிருப்பதுபோல பார்வைக்குத் தோற்றுவானேயொழிய இப்பேர்ப்பட்ட பாங்கு முறிவு சமயங்களில் அவனுடைய அயோக்கியத்தனம் வெளிப்பட்டு தள்ளப்படுவான். ஆனால் அவனுடைய நடத்தையால் அனேக தீங்குகள் உண்டாகி பலபேர்கள் நஷ்டமடைவார்கள். அனுபோகத்தை அடைவதற்கு நாம் நஷ்டப்படவேண்டியதுதான். நஷ்டம் தான் அனுபோகத்தின் கிரையம் என்றும் அனுபோக மடைந்தபின் அந்த அனுபோகம் ஒழுங்கான பாதையில் செலுத்தப்பட்டால் நாம் செய்யும் முயற்சிகள் எல்லாம் பலப்பட்டு ஒழுங்காக நடைபெற்றுவரும் என்றும் சொன்னார்.

சபாநாயகர் பாங்கி சம்பந்தமாக மேற்கண்டபடி சொல்லி முடித்துவிட்டு கைத்தொழிற்களைப்பற்றிப் பேசினார்.

முதலில் விவசாயத்தைப்பற்றிப் பேசி ஐக்கிய முயற்சியால் விவசாயத்தை முன்னுக்குக் கொண்டுவரலாம் என்று சொன்னார். இதன் பிறகு வங்காளத்தில் சணல் தொழிலைப்பற்றியும் பம்பாயில் பருத்திப் பயிர் தொழிலையும் பற்றிப் பேசினார். நம் தேசத்தில் செய்யப்படும். யந்திர தளவாடங்களுக்கு அன்னிய தேசங்களை நாம் நம்பிக்கொண்டிருக்கும் பரியந்தமும் ரசாயன சாஸ்திர ஞானத்தில் அந்நிய தேசங்களைவிட நாம் பிந்தியிருக்கும் பரியந்தமும், ஈஜிப்ட் பஞ்சு அல்லது அமெரிக்கா பஞ்சைப்போல நாம் பஞ்சு நம் நாட்டில் தயார் செய்யாத பரியந்தமும் மான்ச்செஸ்டர் முதலான நெசவுத் தொழிலையுடைய தேசங்களுடன் நாம் போட்டிபோட சாத்தியப்படாது. இந்திய ஆலைகளில் தயார் செய்யப்படும் துணியின்பேரில் போடப்பட்டுவரும் தீர்வையை கவர்ன்மெண்டார் ரத்து செய்துவிடவேண்டும். இன்னும் அநேக கைத்தொழிற்களைப் பற்றி பேசி டாட்டா கம்பெனியின் கைத்தொழிற்கள் தேசத்தின் பொருளாதாரத்தைப் விருத்தி படுததிக்கொண்டு வருகின்றனவென்று சொன்னார். ஜாயின்ட்ஸ்டாக் கம்பெனிகள் முறிந்துபோய்விட்டதைப்பற்றிப் பேசி கம்பெனி எடுத்துக்கொண்ட தொழிலை நடத்த நிபுண ஞானம் வாய்ந்த மனிதர்களைக்கொண்டு தொழிலை நடத்தாதபடியாலும், ஏஜெண்டுகள் அடக்கி நடத்திவர சக்தியற்றவர்களாக யிருந்தபடியாலும், தேவையான பணத்தை சொற்பவட்டிக்கு கடன்வாங்க சாத்தியப்படா

மற் போய்விட்டபடியாலும், மேற்படி கம்பெனிகள் முறிந்துபோய் விட்டனவென்று சொன்னார். ஆயினும் இந்த முறிவுகளால் நாம் பின்னடையாமல் மிகவும் ஜாக்கிரதையாக புதிய தொழிற்களை ஆரம்பித்து நடத்திக்கொண்டுபோக வேண்டுமென்று சொன்னார். இதன்பிறகு பிரஸ்தாப கைத்தொழிற் கான்பரென்சால் உண்டாயிருக்கும் நன்மைகளை எடுத்துச் சொன்னார். வியாபாரப் படிப்பும் கைத்தொழிற் படிப்பும் பரவும்படியும் விவசாயத்தை விருத்தி செய்யும்படியாகவும் செண்டிரல் கோவாபரேட்டிவ் பாங்க் ஏற்படுத்தவும் வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டுமென்று கவர்ன்மெண்டாரை வேண்டிக்கொண்டோம். கவர்ன்மெண்டார் இந்தக்கோரிக்கைகளை எல்லாம் கவனித்துக் கேட்டு வசதிகள் கொடுத்திருக்கிறார்கள். தேசமுழுதிலும் ஒரே அளவும் ஒரே நிறையுமாக விருக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் தீர்மானித்து இந்தப்பிரஸ்னையை ஆராய ஒரே கமிட்டி நியமித்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் இந்நாட்டுக் கைத்தொழிற்களைப் பலப்படுத்த காட்டிவரும் அனுதாபம் சாமானிய அனுதாபமாக எண்ணப்படக்கூடாது. இந்தியன் வியாபார காங்கிரசை பிரஸ்தாப கைத்தொழில் கான்பரன்சுடன் கலந்து விடவேண்டுமென்று பம்பாய் இந்திய வர்த்தக சேம்பரால் ஒரு பிரேரேபணை செய்யப்பட்டிருக்கிறதென்றும் இந்தப்பிரேரேபணையை ஆலோசனை செய்ய கமிட்டியார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் சொல்லிமுடித்தார்.

---

## RESOLUTIONS.

## தீர்மானங் ள்.

பாங்கி என்கிற பதத்தை உபயோகப்படுத்திக் கொள்ளுவதற்கு ஏதேனும் நிபந்தனைகள் ஏற்படவேண்டுமோ வென்னும் விஷயாம்சமாகச்சட்டம் பிறப்பிக்கவேண்டியது அவசியமா என்கிற விஷயத்தைப்பற்றி கவர்ன்மெண்டார் அபிப்பிராயங்கள் கேட்டார்கள் அல்லவா இந்தவிஷயத்தைக்குறித்து இந்தக்கான்பரன்ஸ் அடியிற்கண்டபடி அபிப்பிராயப் படுகின்றது. (1) ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளின் சட்டத்தின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட கம்பெனிகள் மட்டிலும் "பாங்கி" என்ற பெயர் வைத்துக் கொள்ளவேண்டும். (2) பிரிடிஷ் இந்தியாவில் ரிஜிஸ்டர் செய்யப்படாமல் பிரிடிஷ் இந்தியாவில் ஒரு ஆபீசாவது அல்லது ஒரு கிளையாவது வைத்துக்கொண்டிருக்கிற பாங்குகள் பிரரேபணை செய்யப்பட்டிருக்கும் புதிய கம்பெனி ஆக்ட்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும். ஆனால் சட்டப்படி ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் பிரசிடென்சி பாங்குகள் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டியதில்லை (3) பாங்கிக்கு இவ்வளவு முதலிருக்கவேண்டுமென்று குறிப்பிடப் படவேண்டியதில்லை. ஆனால் எடுத்துக்கொள்ளப் பட்ட பங்குகளின் மூலதனத்தில் மூன்றில் ஒரு பாகத்தை கம்பெனி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட 6 மாத காலத்திற்கு முன் செலுத்திவிடவேண்டும். (4) ஆர்ட்டிக்கிள்ஸ் ஆப் மெமோராண்டத்தில் லேவாதேவியுடன் மற்ற வியாபாரமும் செய்யப்படுமென்று காணப்பட்டிருந்தால் அப்பேர்ப்பட்ட கம்பெனியை பாங்கி என்று ரிஜிஸ்டிரார் ரிஜிஸ்டர் செய்யக்கூடாது. ரிஜிஸ்டிரார் தீர்மானத்திற்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் அப்பில் செய்து கொள்ளப்படவேண்டும்: (5) "சேவிங்ஸ் பாங்" என்கிற பெயரை பிரசிடென்சி பாங்குகளும் கவர்ன்மெண்டு தபால் இலாக்கா காரர்களும் உபயோகப்படு

த்தி வரலாமே தவிர மற்றப்படி வேறெந்த புதிய கம்பெனியும் உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடாது. அப்படி உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டுமானல் மேற்படி கம்பெனியின் டிபாசிட் தொகையில் 3-ல் 2 பாகம் கவர்ன்மெண்டு பத்திரங்களில் டிரஸ்ட் சட்டத்தின் படி போட்டு முடக்கப்பட்டிருக்கவேண்டும்.

இந்தத்தீர்மானம் மிஸ்டர் தின்ஷா இடல்ஜி வாச்சாவால் பிரரேபணைசெய்யப்பட்டு எல்லோராலும் அங்கிகரிக்கப்பட்டது.

இரண்டாவது தீர்மானம் சர்பாசல்பாய் கரீம்பாய் இப்ரகிம் பிரரேபணை செய்யப்பட்ட இந்திய வியாபார காங்கிரசைப்பற்றியது. இந்த காங்கிரசைப்பற்றி யோஜனை செய்யவும் அது இந்திய கைத்தொழில் கான்பரன்சுடன் கலந்து வேலை செய்யும்படியாக என்ன ஏற்பாடுகள் செய்யலாமென்று ஆலோஜனை செய்யவும் அடியிற் கண்டவர்கள் கூடிய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது:—(1) மெசர்ஸ் முதல்க்கர் லல்லுபாய் சாமல்தாஸ், சர்பாசல்பாய் கரீம்பாய், சர் R. N. முக்கர்ஜி, G. சௌத்திரி கலகப் பிரசாத்வர்மா, சிந்தாமணி, N. சுபபாராவ், ராஜரத்னமுதலியார், G. சகளாயூசபாலி, லாலாலஜபட்ராய். இந்த பிரரேபணையைப்பற்றி சர்பாசல்கரீம்பாய் பேசும்போது இந்த காங்கிரசால் இந்தியன் கைத்தொழில் கான்பரன்சிற்கு யாதொரு இடையூறும் உண்டாகமாட்டாதென்றும் வியாபார சம்பந்தமான சில்லரை விஷயங்களையும் கடினமான பிரஸ்னைகளையும் இந்தியன் கைத்தொழில் கான்பரன்ஸ்போலொத்த மகா சபையில் பேசி தீர்மானிக்க சாவகாசம் உண்டாகமாட்டாதென்றும் இதன்றி இப்போது நடத்தப்பட்டுவரும் கைத்தொழில் கான்பரன்சில் பெரும்பாலும் வர்த்தகர்கள் சேருகிறதில்லை என்றும் ஆதலால் இந்தியன் வியாபாரக் கான்பரன்ஸ ஒன்று பிரத்தியேகமிருக்க வேண்டுமென்றும், அதற்குப் பிரதிநிதிகள் இந்தியாவிலிருக்கும் வியாபார ஆலோஜனை சபைகளிலிருந்தும், வியாபார சங்கங்களிலிருந்தும் வரவேண்டுமென்றும் சொன்னர்.

இந்த இரண்டாவது தீர்மானம் மிஸடர் ஜிகாங்கியர்பிட் என்பவரால் பிரரேபணை செய்யப்பட எல்லோராலும் அங்கிகரிக்கப்பட்டது.

மூன்ருவது தீர்மானம் இந்தியாவிலுள்ள வர்த்தகச் சேம்பர்கள் இந்தியன் கைத்தொழில் கான்பரன்சில் கலந்திருக்க வேண்டுமென்பதுவும் பிரரேபணை செய்யப்பட்டு அங்கிகரிக்கப்பட்டது.

கல்கத்தாவிலிருந்து வந்திருக்கும் மிஸடர் சவுத்திரி தேச முழுதிலும் ஒரே அளவும் ஒரே நிறையும் உபயோகப்படுத்தப்பட்டு வரும்படி ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று பிரரேபணை செய்தார். மிஸடர். கோக்கல்தாஸ் பரேக் அப்ரன்டிஸ்கள் தாக்கல் செய்யப்படவேண்டுமென்று பிரரேபணை செய்தார். டாக்டர் ராஷ்பிகாரிகோஷ் அவர்கள் கைத்தொழில் படிப்பு அபிவிருத்திக்காக நன்கொடை கொடுத்திருப்பதுபோல இன்னும் அவளைப்போலொத்த தனவந்தர்களும் நன்கொடை அளித்து வரவேண்டுமென்று மிஸ்டர் தியாடோர் பிரரேபணை செய்தார். இக்கைத்தொழில் கான்பரன்சிற்கு பிரத்தியேகமாக ஒரு நிதியிருக்கவேண்டுமென்று ஒரு பிரரேபணை செய்யப்பட்டது. சென்னை ஐக்கோர்ட் ஜட்ஜியாகவிருந்த மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்திரமய்யர் மரணத்தைப்பற்றி துக்கம் பாராட்டி ஒருபிரரேபணை செய்யப்பட்டது. இந்தப்பிரரேபணைகள் எல்லாம் சபையோரால் ஏகோபித்து அங்கிகரிக்கப்பட்டன.

இத்துடன் கான்பரன்ஸ் கலைந்தது.

# CO-OPERATION.

## ஐக்கிய முயற்சி.

### சென்னை மாகாண ஐக்கிய நாணய கான்பரன்ஸ்.

ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் சபாநாயகர்.

சென்னைமாகாண ஐக்கிய முயற்சி கான்பரன்சின் இரண்டாவது வருடத்தியக் கூட்டம் நிகழ் மாதம் 3-ந்தேதி சனிக்கிழமை திருவல்லிக்கேணிஹிந்துஹைஸ்கூலில்நடத்தப்பட்டது. சுமார் 120 பிரதிநிதிகள் இராமநாதபுரம், மதுரை சேலம்,வடஆற்காடு முதலியபலவிடங்களிலிருந்து விஜயம் செய்திருந்தார்கள். ஐக்கிய முயற்சி பிரபலமாக ஜனங்களுடைய மனதைக் கவர்ந்திருக்கும் செங்கற்பட்டு ஜில்லாவிலிருந்தும் அனேக பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இன்னும் அனேக பெரிய மனிதர்கள் விஜயஞ் செய்திருந்ததுமன்றி அடியிற்கண்ட கனவான்களும் வந்திருந்தார்கள்:—ஆனரபில் திவான் பகதூர் எல். டி. சாமிக்கண்ணுப்பிள்ளை,ஆனரபில் மிஸ்டர் வி. இராமபத்திரநாயுடு, ஆனரபில் மிஸடர் கே. இராமய்யங்கார், திவான் பகதூர் கெ. கிருஷ்ணசாமி ராவ், எம். ஆதிநாராயணய்யா, எல். ஏ. கோவிந்தராகவய்யர், ஆனரபில் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர், ஸர். வி. சி. தேசிகாச்சாரியார், ரூவ்பகதூர்கள் தர்மரங்கராஜு, என். கிருஷ்ணசாமி அய்யங்கார், ரூவ் சாகிப்கள் வி. ஏ. பார்த்தசாரதி முதலியார், கே. விஜயராகவாச்சாரியார், செல்லப்பள்ளி குமாரராஜா, மெசர்ஸ் P. T. சாட்விக், சி. பி. ராமசாமி அய்யர், டி. ரெங்காச்சாரியார் ஜெ. ரமய்யபந்துலு, என். பட்டாபிராமராவ், T. ஆதிநாராயண செட்டி, சி. என். கிருஷ்ணசாமி அய்யர், பண்டிட் வித்தியாசாகர் பாண்டியா, சி. இராஜகோபாலசெட்டியார், கே. ஜி. வெங்கடசுப்பய்யர், கே. பி. இராமநாதய்யர், சி. கே. மகாதேவய்யர்.

பிரதிநிதிகளை வரவேற்கும் கமிட்டிக்கு.

திவான்பகதூர் கிருஷ்ணசாமி ராவ் சேர்மேனாகவிருந்து அடியிற்கண்ட பொருள் நிரம்பிய பிரசங்கம் செய்தனர்.

பிரதிநிதிகள் அனேகர் அவர்களுடைய அல்லல் தொல்லைகளை விட்டுப்போட்டு தேகசிரமத்தையும், பணச்செலவையும், அனேக அசெளகரியங்களையும் லக்ஷியம்செய்யாமல் வெகுதூரங்களிலிருந்து வந்திருப்பது இம்மாகாணத்தில் ஐக்கிய முயற்சி பலமாய் வேரூன்றி வருவதைக் காண்பிக்கின்றது. இம்மகாசபைக்கு ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவசாமி அய்யர் அவர்கள் இவ்விராஜதானியின் நிர்வாக வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு சபாநாயகராக விருக்க இசைந்ததற்காக நாமெல்லோரும் அவருக்கு வந்தனமளிக்க கடமைப்பட் டிருக்கிறோம். இதற்கு முந்தி இந்தியா மந்திரியாகவிருந்த லார்ட் மார்லியின் தாராளமான சீர்திருத்த ஏற்பாட்டால் கவர்னர் நிர்வாகசபையில் சுதேசி ஒருவர் மெம்பராகவிருக்கவும், அந்த மெம்பர்ஸ்தானத்தில் ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசாமிஅய்யர் அவர்களிருக்கவும், ஆகவே கவர்னர் நிர்வாக சபையின் சுதேச மெம்பர் இச்சபைக்குச் சபாநாயகராக விருக்கவும் ஆகிய இந்த பாக்கியங்களெல்லாம் லார்ட் மார்லி காலத்தில் நமக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரங்களானபடியால் அவர்பால் நன்றிபாராட்டி வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தியாவின் பொருளாதாரத்தைப் பலப்படுத்திக் கொண்டு

போகக்கூடிய ஏதுக்களில் ஒன்றாகிய ஐக்கிய முயற்சி கான்பரன்சிற்காக வந்திருக்கும் பிரதிநிதிகள் இவ்விடம் சௌகரியமாக தங்கியிருக்கும்படி கூடியவரையில் வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதில் தடையில்லை. அவர்களும் திருப்தி அடைவார்களென்று நம்புகின்றேன். ஆயினும் அவ்வேற்பாடுகளில் ஏதேனும் குறைவுபடுமாயின் அவர்களை உபசரிக்க வேண்டுமென்கிற எங்களுடைய உள்ளன்பில் குறைவிருப்பதாக எண்ணப்படக்கூடாது. இம்மகாசபை சென்ற வருடம் முதல்தடவை கூடினதால் உண்டான நன்மை இரண்டாவது முறையும் கூட்டும்படி தூண்டியிருக்கிறது. மேலும் ஐக்கியமுயற்சியில் சம்பந்தப்பட்ட பலபேர்கள் பலவிடங்களிலிருப்பவர்கள் வருடத்திற்கு ஒரு முறையாகிலும் ஒரு விடத்தில் சந்தித்து கலந்து பேசி ஐக்கிய முயற்சிக்கு இடையூறாக விருக்கும் ஏற்பாடுகளை ரத்துசெய்யவும், அதை வளர்த்துக் கொண்டு போகும்படியான ஏற்பாடுகளை பலப்படுத்தவும் கலந்து யோஜனை செய்யவேண்டியதவசியமாகத் தானிருக்கிறது. சென்ற வருடம் இச்சபைக்கு மேன்மைதங்கிய கவர்னர் லார்ட் பென்ட்லாண்டு சபாநாயகராகவிருந்து ஐக்கிய முயற்சி தனக்குத்தானே ஆக்ஷி செலுத்தும் முயற்சி என்றும் அது திடகாத்திரத்துடன் ஜீவித்திருப்பது அதனுடைய மெம்பர்களுடைய புத்திசாலித் தன்மையையும், ஜாக்கிரதையையும், நேர்மையும் பொருத்ததாயிருக்கிறதென்று சொன்னார்கள். இந்த அருமையான வாக்கியங்கள் ஐக்கிய முயற்சியில் கலந்திருக்கும் ஒவ்வொருவருடைய இருதயத்தி லிருக்குமென்று நம்புகின்றேன். சென்ற வருடத்திய கான்பரன்சில் திவான்பகதூர் எல்.டி. சாமிக்கண்ணுப் பிள்ளை செய்த யோசனை நிறைப்பெற்ற பிரசங்கத்தில் நம்முடைய சங்கங்களில் புலப்படும் சில குறைபாடுகளை எடுத்துக்காட்டினர். நம்முடைய உண்மையான மித்திரர்கள் யார் என்றால் நம்முடைய குற்றங்களை சுட்டிக்காட்டி நமக்கு ஒழுங்கான பாதையைக் காண்பிப்பவர்களே. பூராதினகாலத்தில் ஏற்படுத்தப்பட்டு நாளதுவரையில் ஒழுங்காக மானேஜ்மெண்டு செய்துவரப்படும் சங்கங்களில்கூட குறைபாடிருப்பது சகஜமேயொழிய மற்றப்படி வேறில்லை. ஐக்கியமுயற்சியோ நம்முடைய ராஜதானியில் சிசுபோலிருக்கிறது. அதில் குறைபாடுகளில்லாவிட்டால் அது தெய்வத்தன்மை பொருந்தினதாக யிருக்கவேண்டும். எந்தச் சங்கம் அல்லது மனிதன் கண்டனத்தை நிக்கிரகிக்காமல் வருந்தி உழைத்து தன்னை சீர்திருத்திக் கொண்டு நடக்கிறானோ அந்த மனிதன் அல்லது அந்த சங்கந்தான் நல்ல வேலைகளைச் செய்து லாபத்தை அடைகிறான். இந்த உலகத்தில் பூர்த்திபட்ட ஞானத்தை உடையவன் எவனும் இல்லை. இது தெய்வச்செயல். ஆதலால் தனக்குத் தெரிந்ததை பிறருக்குச் சொல்லவேணும் பிறருக்கு சொல்லுவதை தான் கேட்டுக்கொள்ளவேண்டும். ஆகவே நல்லெண்ணத்தோடு செய்யப்படும் கண்டனத்தை நிக்கிரகிப்பது பரஸ்பர விருத்திக்கு இடையூறாயிருக்கும் இயற்கையான ஏதுக்களில் ஒன்றாகும்.

கோவாப்பரேட்டிவ் சங்கங்கள் நன்மையைப் பயக்கும்படியாக வேலைசெய்ய வேண்டுமானால் அவைகளுடைய மெம்பர்கள் ஒழுங்கான ஒழுக்கமுடையவர்களாகவும் உத்திரவாதத்தைபலமாய் உணர்ந்தவர்களாக விருக்கவேண்டும். இப்போது கிராமாந்தர சங்கங்களில் கடன் வாங்கிக் கொண்டு வருகிறவர்கள் இதற்கு முந்தி சாவுகார்களிடம் கடன்பட்டவர்கள். சாவுகார்கள் கடன் கொடுக்கப்பட்டன பணம் குறிப்பிட்ட வாய்தா காலத்தில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்கிற கொள்கையற்றவர்கள். கடன் வாங்கினவன் கொஞ்சம் ஜாஸ்தி வட்டி கொடுக்க இசைந்தால் கடனை திரும்பவும் வசூல்

செய்யப்படவேண்டிய வாயுதா காலத்தை தாராளமாக இன்னும் தள்ளியும் வைப்பார்கள். இதேமாதிரியாக ஐக்கிய முயற்சி சங்கங்களில் கடன் வாங்குபவர்களும் ஷை சங்கங்களால் இம்மாதிரி தாராளமாக நடத்தப்பட வேண்டுமென்று விரும்புகிறதாகத் தெரிகிறது? மிகுந்த கேவலவட்டிக்கு கடன் வாங்கிவருவதை அவர்கள் கவனிக்கவில்லை. எந்த கிராம சங்கங்களிடமிருந்து கடன் வாங்கப்படுகிறதோ அந்த கிராம சங்கங்கள் செண்டிரல் பாங்கிடமிருந்து ..................கடன் வாங்கின பணத்தைக் கொண்டும், டிபாசிட்டர்கள் போட்ட பணத்தைக்கொண்டும் தங்களுக்கு கடன் கொடுத்திருக்கின்றன என்பதையும் கடன்வாங்கின கிராம சங்கங்கள் சரியான வாயுதா காலத்தில் கடனைத்திரும்ப செலுத்தாவிடில் செண்டிரல் பாங்கு அவைகளை நெருக்குகின்றன என்பதை அவர்கள் அறிந்து கொள்ளுகிறதில்லை.

கடன் வாங்கியிருக்கும் ஐக்கிய சங்கங்கள் செண்டிரல் பாங்கிற்கு சரியான வாயுதா காலத்தில் கடனைத் திருப்பிக்கொடுத்து தங்களுடைய நாணயத்தைக் காப்பாற்றிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறபடியால் வட்டிக்கு ஆசைப்படும் சாவுகார்களைப்போல பொருத்து சாவகாசமாக கடனை வசூல் செய்துகொள்ள சாத்தியப்படமாட்டாது. கடனை கண்டிப்பாக வாயுதா காலத்தில் செலுத்தும் ஒரு கடனாளி மரியாதையையும் கௌரவத்தையும் பெறுகிறான். மறுமுறை அவன் கடன்வாங்க மனு செய்துகொண்டால் அவனுடைய மனு கௌரவப்படுத்தப்பட்டு கடன் சந்தோஷத்துடன் கொடுக்கப்படுகிறது. மிகுந்த சொற்ப வட்டிக்கு கடன் கொடுக்கப்படுகிறது. வாயுதா காலமும் தாராளமாக தள்ளிவைக்கப்படுகிறது. சிக்கனமாகச் செலவு செய்கிறவர்கள்தான் வாயுதா காலத்தில் கடனை திருப்பிக்கொடுக்கக் கூடுமென்று சொன்னார். சிக்கனமாக செலவு செய்வது ஒரு நல்ல குணாதிசயம். கடன் வாங்கும் ஒவ்வொருவனிடமும் இந்த குணாதிசயம் அபரிமிதமாயிருக்க வேண்டும். கிரமமாகவும் ஒழுங்காகவும் பொறுப்புடனும் வேலைகளைச் செய்வது பெரும்பாலும் நம்முடைய தேச ஜனங்களுக்கு தெரியாத காரியம். நம்மவர்கள் உத்திரவாத மென்பதை இன்னும் உணரவில்லை. ஐக்கிய நாணய சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சட்டங்களும் விதிகளும் அனுபோக முடையவர்களால் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த விதிகளை நம்மவர்கள் பெரும்பாலும் அனுஷ்டிக்கிறதில்லை. இந்த உத்தரவாதத்தை உணராததால் மெம்பர்கள் மீட்டிங்குகளுக்கு ஒழுங்காய் வருகிறதில்லை. மீட்டிங்கு நடத்துவதற்கு வேண்டிய அளவு கூட மெம்பர்கள் வராமலிருந்தால் அனேக மீட்டிங்குகள் நடத்தப்படாமல் போய்விடுவதால் வேலைகள் சரியான காலத்தில் நடத்தப்படாமல் அனேக பிசகுகள் நடத்தப்படுகின்றன. கோவாப்பரேடிவ் ரிஜிஸ்டிரார் 1912-13-ம் வருட ரிப்போர்ட்டின் 50, 51 வது பாராவில் மெம்பர்கள் அவர்களுடைய உத்தரவாதத்தையும் கடமைகளையும் உணராமலிருப்பதை முன்னிட்டு அனேக சங்கங்கள் மிகவும் பரிதாபகரமான நிலைமையிலிருக்கின்றன என்று ரிப்போர்ட் செய்திருக்கிறார். இப்பேர்ப்பட்ட சங்கங்கள் எண்ணிக்கையில் குறைவாக விருந்தபோதிலும் ஒருவன் செய்தபாவம் அவனுடைய சந்ததியார் எல்லோரையும் தொடரும் என்று ஸ்ரீ மகாபாரதத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல அந்த கெட்டபெயர் ஒழுங்காயும் கிரமமாயும் நடத்தப்பட்டுவரும் ஐக்கிய நாணய சங்கங்கள் முழுவதுக்கும் வந்துசேருகிறது. இப்படி ஜனங்கள் உத்தரவாதத்தையும் கடமைகளையும் உணராமலும் ஒழுங்காய் வேலைகளையும் நடத்தாமலிருப்பதற்குக் காரணம் என்னவென்றால் அவர்களுக்கு படிப்பில்லாமையை முன்னிட்டேயொழிய மற்றப்படி வேறில்லை. கோவாப்பரேட்டிவ் ரிஜிஸ்டிரார் மேத்

பார்வையில் ஐக்கிய சங்கங்களைப்பற்றி பிரசுரங்கள் ஏதேஷ்டமாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதில் தடையில்லை. அது போதாது. ஐக்கிய முயற்சிகளின் கொள்கைகளைப்பற்றி புஸ்தகங்களும் பிரசுரங்களும் எழுதப்பட்டு பள்ளியில் பயிலும் சிறு மாணவர்களுக்கு பாடமாக வைத்து கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறேன். கவர்ன்மெண்டார் ஐக்கிய சங்கங்களை இப்போது மேல்பார்வை பார்த்துவருவதுபோல இனியும் பார்த்துவருவது அவசியமாகும். அப்படி பார்த்துவருவது அவசியமென்று ஏற்பட்டால் கவர்ன்மெண்டார் அதுவிஷயமாகச் செய்யும் செலவிற்கு சங்கங்கள் ஏதேனும் செலுத்திக் கொண்டு வரவேண்டுமா என்கிற பிரஸ்னை வெகுகாலமாக யோஜனை செய்யப்பட்டு வருகிறது. ஐக்கியமுயற்சி இத்தேசத்தில் இவ்வளவு வெற்றி அடைந்திருப்பதற்கும், இவ்வளவுதூரம் நன்மையைப்பயக்க ஆரம்பித்திருப்பதற்கும் காரணம் என்னவென்றால், அம்முயற்சி கவர்ன்மெண்டாருடைய நேரான பார்வையில் நடத்தப்பட்டு வருவதே! ஜனங்கள் ஐக்கிய நாணய சங்கங்கள்மீது நம்பிக்கைவைத்து வருவதற்கு காரணம் என்னவென்றால் கவர்ன்மெண்டாரை முன்னிட்டே. கவர்ன்மெண்டாரும் முன்னுக்கிப்போது அதிக சிப்பந்திகள் நியமித்து அதிகப்படியான செலவுகளைச் செய்து இம்முயற்சியை நடத்திவருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் இந்த ஆரம்ப சமயத்தில் சங்கங்கள் ஏதேனும் மேற்படி செலவுகளுக்காக கவர்ன்மெண்டிற்குச் செலுத்திக் கொண்டு வரவேண்டுமென்று ஏற்பாடு செய்தால் கவர்ன்மெண்டார் ஐக்கிய முயற்சி விஷயமாக வைத்திருக்கும் நல்ல எண்ணம் சமுசயிக்கப்பட்டு ஒரு புதியவரி போடப்பட்டிருப்பதாக எண்ணப்படும். ஆதலால் இன்னும் சிலகாலம் தள்ளி இம்மாதிரி ஏற்பாடு கவர்ன்மெண்டார் செய்தால் உத்தமமாக விருக்குமென்று நினைக்கிறேன். நிற்க, நம்முடைய ராஜதானியில் ஐக்கிய முயற்சியால் செய்யப்பட்டிருக்கிற வேலை எல்லாம்கூடி கடன் சொற்ப வட்டிக்கு கொடுக்கப்பட்டு வருகிறதேயொழிய மற்றபடி ஐக்கிய முயற்சியும் கொள்கையும் மற்ற விஷயங்களில் பிரயோகப்படுத்தவில்லை. சொத்தின் விளைபொருள்களை உற்பத்தி செய்வதிலும் அவைகளை விலையாக்குவதிலும் பிரயோகப்படுத்தப்படவில்லை. இந்த விஷயத்தில் சென்னை மாகாணம் பம்பாய் மாகாணத்திற்கு பிந்தி நிற்கிறது. பம்பாயில் கரும்புப்பயிர் சாகுபடிக்காக 29, எரு சப்ளை செய்வதற்காக 2, விதை சப்ளைக்காக 12, மலிவாக நூல் சப்ளை செய்வதற்காக நெசவுகாரர்கள் 24, சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பேற்பட்ட சங்கங்கள் இந்த மாகாணத்திலும் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று திவான்பகதூர் M. ஆதிநாராயணய்யாகாரும், N. பட்டாபிராமராவ் பந்துலுகாரும் தென்தேசங்களில் சுற்றுப் பிரயாணஞ்செய்து பிரசங்கம் செய்து ஜனங்களுக்கு போதித்துக்கொண்டு வந்தார்கள். இதன பயன் இன்னும் தெரியவில்லை. நிற்க, 1912-15ம் வருடத்தில் அதிகப்படியான சங்கங்கள் புதிதாய் ரெஜிஸ்டர் செய்யப்படவில்லை. இதனால் ஐக்கிய முயற்சியை கவர்ன்மெண்டார் அடக்கிக்கொண்டு வருவதாக நினைக்கக்கூடாது. இது விஷயமாக சட்டசபையில் கேள்வி பிறந்ததற்கு ரிஜிஸ்டிராரும் அவருடைய சிப்பந்திகளும் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் புதிய சங்கங்களை ரிஜிஸ்டர் செய்வதில் கவனம் செலுத்திவருகிறார்கள் என்பதாக பதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு ஜில்லா கலெக்டருடைய அதிகார எல்லைக்குள் எத்தனை சங்கங்களிருக்கவேண்டுமென்பதற்கு செங்கற்பட்டு ஜில்லாவில் உற்பத்தியாயிருக்கும் சங்கங்களை ஒரு அளவாக வைத்துக்கொண்டால், இந்த சென்னை மாகாணத்தில் 4,800 சங்கங்களிருக்கவேண்டும். ஆனால் இப்போதோ 1,100

சங்கங்கள்தானிருக்கவேண்டும். ஜெர்மனி தேசத்தின் ஜனத்தொகை 620 லக்ஷம். 20 ஆயிரம் சங்கங்களிருக்கின்றன. ஆகையால் சென்னை ஜனத்தொகை 420 லக்ஷத்திற்கு 14 ஆயிரம் சங்கங்களிருக்கவேண்டும். இப்படி நான் சொல்லுவதால் சங்கங்களை இவ்வளவு தூரம் சீக்கிரம் விருத்திசெய்து கொண்டுபோகவேண்டுமென்று நான் சொல்லவில்லை. நான், நிதானித்து தாமதமாக வேலை செய்வதில் நம்பிக்கையுடையவன். கோவாப்பரேட்டிவ் சங்கங்களுக்குள்ளாகவே ஒருகிராம பஞ்சாயத்து ஏற்பட்டு கிராமத்தின் படிப்பு சுகாதாரமும் அந்த பஞ்சாயத்திடமே கவர்ன்மெண்டார் அவைகளுக்காக சாங்கிஷன் செய்திருக்கும் பணங்களுடன் ஒப்புவிக்க வேண்டுமென்று நீங்கள் முந்திய கான்பரென்சுகளில் தீர்மானஞ் செய்திருக்கிறீர்கள். ஐக்கிய முயற்சி என்கிற குழந்தை இப்போது தொட்டிலில் படுத்துக்கொண்டிருக்கிறது. சுயபரிபாலனத்திற்கு அது பொருந்தினதல்ல. ஆயினும் கவர்ன்மெண்டார் இதுவிஷயமாக ஆலோசனை செய்வார்கள். கவர்ன்மெண்டார் நீங்கள் செய்யும் தீர்மானங்களை ஒப்புக்கொள்ளாவிடில் அதனால் அவர்கள் ஐக்கியமுயற்சியில் அனுதாபமற்றவர்களாக யிருப்பதாக நீங்கள் தாற்பரியம் செய்து கொள்ளக்கூடாதென்று சொல்லி முடித்தார்.

---

## சபா நாயகர் பிரசங்கம்.

---

ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசுவாமி அய்யர் அவர்கள் மதுரையில் கூடின கான்பரன்சிற்கு சபாநாயகராயிருந்தபோது செய்த நீண்ட பிரசங்கம்போல அவ்வளவு பெரிய பிரசங்கம் செய்யவில்லை. மதுரையில் கூடிய கான்பரன்சிலேயே தம்முடைய நோக்கங்களையும் அபிப்பிராயங்களையும் அறிவித்துவிட்டபடியாலும் பிரஸ்தாப கான்பரன்சில் சொல்லப்படவேண்டிய யோஜனைகளையும் புத்திமதிகளையும் உபசார கமிட்டிச் சேர்மேனே எடுத்துப் பேசிவிட்டபடியாலும், சபாநாயகர் அவர்கள் இரண்டொரு வார்த்தைகள் மட்டிலும் சொல்லி...... ..................................பிரசங்கத்தை முடித்துவிட்டார். சென்னை மாகாண பிரஸ்தாப கான்பரன்ஸ் மற்ற ஜில்லா கான்பரன்சுகளுக்குப் பிந்தியதாக இருந்தபோதிலும் பிரஸ்தாப கான்பரன்சு மெம்பர்களுடைய முயற்சியால் நடத்தப்பட்டு வருகிறதேயல்லாமல் மற்றப்படி ஜில்லாக் கான்பரன்சைப்போல கோவாப்பரேட்டிவ் ரிஜிஸ்டிராரும் அவருடைய சிப்பந்திகளின் பிரயத்தனத்தால் நடைபெற்று வரவில்லை என்று சொன்னார். சென்ற 1912-1913-ம் வருடத்தில் ஐக்கிய சங்கங்கள் அதிகப்படியாய் ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை என்று வரவேற்பு கமிட்டிசேர்மன் சொல்லி விசனப்படுகிறார். இது உண்மையாயினும் இதனால் ஐக்கிய முயற்சியை அடக்கிவர கவர்ன்மெண்டார் ஆரம்பித்துவிட்டார்கள் என்று எண்ணக்கூடாது! ஐக்கிய முயற்சி இம்மாகாணத்தில் செய்திருக்கும் நன்மைகளை கவனிக்கின் மாகாணத்தின் ஒவ்வொரு மூலையிலும் ஐக்கிய சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று கவர்ன்மெண்டாரும் மற்றவர்களும் உண்மையில் நினைப்பார்கள் என்பதில் ; தடை

யில்லை. சட்டசபையில் ஆனரபில் ஸர்ஜான் அட்க்கின்சன் கூறினதுபோல ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருக்கும் சங்கங்கள் ஒழுங்காய் நடைபெற்று வருகின்றனவா என்று கவனித்து ஆராய்வதில் ரிஜிஸ்டிராரும் அவருடைய சிப்பந்திகளும் கவனம் செலுத்தி வருகிறார்கள். சமயாசமயத்தில் ரிஜிஸ்டர் செய்யும் வேலையை நிறுத்தி ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்களின் நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்த்து சீர்திருத்த வேண்டியது அவசியமாகத்தானிருக்கிறது, மேலும் அதிகப்படியான சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்படாமலிருப்பதற்குக் காரணம் என்னவென்றால் ஒருவிடத்தில் ஒரு சங்கம் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டுமானால் என்ன யோக்கியதைகள் அதற்குப் பொருந்தியிருக்க வேண்டுமென்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறதோ அவைகள் எல்லாம் பொருந்தியிருப்பதாக ரிஜிஸ்டர் செய்வதற்காகக் கேட்டுக்கொள்ளும் மனுவில் சொல்லப்படுகிறதில்லை. ஆதலால் இந்த யோக்கியதைகளை எல்லாம் ரெஜிஸடிரார் விசாரணைசெய்து அம்மனுவைப் பைசல்செய்யக் கடமைப்பட்டிருக்கிறார். இதனாலும் ரிஜிஸ்டர் செய்ய தாமதமாகிறது. மேலும் 1912-13ல் சொற்ப சங்கங்கள் மட்டிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருப்பது இந்த மாகாணத்தில்மட்டிலுமல்ல; பம்பாய் கல்கத்தாவிலும் இப்படியே குறைவாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும் 1913-14ல் அதிகப்படியான சங்கங்கள் ரிஜிஸடர் செய்யப்படுமென்பதில் தடையில்லை. கவர்ன்மெண்டாருடைய உத்திரவின்பேரில் அதிகப்படியான சிப்பந்திகள் ரிஜிஸ்டிரார் நியமித்துக் கொண்டிருக்கிறார்.

பிரஸ்தாப வருடத்தில் சங்கங்கள் குறைவாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதேயொழிய மற்ற அம்சங்களில் இம்மாகாணம் விருத்திமுகம் காட்டியிருக்கிறது. ஐக்கிய நாணய சங்கங்களுக்கு வேலைசெய்யும் மூலதனம் 1911–12 ரூ. 44 லக்ஷமாகயிருந்தது 1912–13-ல் ரூ. 95 லக்ஷமாக ஏறி யிருக்கின்றது. கடனாக கொடுக்கப்பட்ட மொத்தத் தொகையில் 1911-12ல் விவசாய சங்கங்களில் சாகுபடி காரியங்களுக்காக 100-க்கு 41;49 விதம் கடன் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது.

ஆனால் 1912–13லிலோ 56.02 விதம் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. சங்கங்களுக்கு வந்த லாபத்தையும் கவனித்துப் பார்த்தாலோ 1911-12யை விட அதிகப்படியாய்தான் வந்திருக்கிறது. ஐக்கிய முயற்சி மலிவான வட்டிக்குக் கடன் கொடுக்கிற ஒரு காரியத்தில் உபயோகப்பட்டிருக்கிறதே ஒழிய மற்றக் காரியங்களில் உபயோகப்படுத்தப் பட்டுவரவில்லை. ஆயினும் ஜனங்கள் தங்களுடைய கடமைகளை உணர்ந்துகொண்டு வருகிறபடியாலும் யாதொரு சம்பளமின்றி தேச நன்மைக்காகப் பாடுபட்டுவரும் திவான்பகதூர் ஆதிநாராயணய்யா, மிஸ்டர் N. பட்டாபி ராமராவ் போலொத்த பிரமுகர்களுடைய முயற்சியாலும் மற்ற காரியங்களிலும் ஐக்கிய முயற்சி பிரயோகப்படுத்தப்பட்டு வருமென்று நம்புகின்றேன்; மதிராஸ் உப்புக் கொட்டாரத்தில் ஏற்பட்டிருக்கும் சங்கமும் மிகவும் நன்றாய் நடைபெற்று வருகின்றன. கோயமுத்தூர் நகரத்தை விஸ்தீரணப்படுத்தி புதிய கட்டடங்கள் கட்ட ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இதுபோல் ஜனநெருளுடைய மதுரைபோலொத்த நகரவாசங்களில் சங்கங்கள் ஸதாபிக்கலாம். ஐக்கிய முயற்சி கோதாவரி, கெஞ்சம் கடப்பை, கர்நூல் முதலிய வடபிராந்தியங்களில் இன்னும் செய்யப்படாமலிருப்பது விசனகரமாயிருக்கிறது. கவர்ன்மெண்டார் சங்கங்களின் கணக்குகளை பரிசோதனை செய்துவருவதற்காக ஏதேனும் கட்டணம் சங்கங்கள் செலுத்தி வரவேண்டுமென்று

ஒரு ஏற்பாடு செய்ய கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்து வருகிறார்கள் என்றும் இது விஷயமாகவும் இந்தக் கான்பரன்ஸில் யோஜனைசெய்து ஒரு தீர்மானம் செய்யப்படப் போகிறதாகத் தெரிகிறது. இந்த விஷயம் கவர்ன்மெண்டாருடைய ஆலோசனையி லிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் சங்கங்கள் கட்டணம் செலுத்திவர சக்தி உடையவாயிருக்கிறது இல்லை என்று இந்த கான்பரன்ஸில் தீர்மானிக்கப்பட்டு கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக்கொண்டால் அந்தத் தீர்மானம் கவர்ன்மெண்டாருடைய முழு கவனத்தையும் பெறுமென்பதில் சந்தேகமில்லை. ஐக்கிய முயற்சி சங்கங்களுக்குள்ளவே கிராமப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டுச் சுகாதாரம், கல்வி, மராமத்து ஆகிய இவைகளுக்கு கவர்ன்மெண்டார் செலவு செய்ய உத்தேசித்திருக்கும் பணம் ஷை பஞ்சாயத்திடம் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்று ஒரு தீர்மானம் இந்த கான்பரன்ஸில் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ஐக்கிய முயற்சி இன்னும் இம்மாகாணத்தில் தொட்டிலில் படுத்திருக்கும் சிசுபோலிருந்து கொண்டிருக்கிறது. ஆயினும் உங்களுடைய தீர்மானத்தை கவர்ன்மெண்டார் கவனிப்பார்கள் என்று சொல்லிமுடித்தார்.

## தீர்மானங்கள்.

இக்கான்பரன்ஸில் அநேக தீர்மானங்கள் செய்யப்பட்டன. பிரேரிக்கப்பட்ட தீர்மானங்களனைத்தும் நிறைவேறின. முதலாவது தீர்மானம், கோவாப்ரேடிவ் ஸொஸைடிகளின் கணக்கு வழக்குகளைப் பரிசோதனை செய்வதற்குப் பிரதி பலனாக ஒவ்வொரு ஸொஸைடிக்கும் கிடைக்கும்,லாபத்தில் 100-க்கு 5-விதம் வசூலிக்கப்பட வேண்டுமென்று கவர்ன்மெண்ட் பிரேரணை செய்திருப்பதைப்பற்றியது. இந்த தீர்மானத்தை பிரேரணை செய்த மிஸ்டர் கங்காதர சாஸ்திரி கவர்ன்மெண்ட் செய்திருக்கும் பிரேரணையின்படி ஸொஸைடிகளுக்குக் கிடைக்கும் லாபத்திலிருந்து 100-க்கு 5 விதம் பிடுங்கப்பட்டுப்போனால், சங்கங்கள் அபிவிருத்தியாவதற்கு இடமின்றிப் போய்விடுமென்றும், ஸொஸைட்டியார் கொடுக்கக்கூடியகாலமும் அவைகளிடமிருந்து கவர்ன்மெண்ட் பிரதிபலன் வாங்கக்கூடிய காலமும் இன்னும் வரவில்லையென்றும் ஆகவே கவர்ன்மெண்ட் அப்படிச் செய்வது கூடாதென்றும் சொன்னார். தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## கோ-ஆபரேடிவ் யூனியன்கள்.

பல கோ-ஆபரேடிவ் சங்கங்களை மெம்பர்களாகக் கொண்ட யூனியன் பாங்கிகள் ஆங்காங்கு ஏற்படவேண்டுமென்பதும், அந்தப் பாங்கிகள் ஆலோசனைச் சபைகளை வைத்துக்கொள்ள வேண்டுமென்பதும் அந்த ஆலோசனை சபைகள் ஸெண்டிரல்பாங்கியைச் சேர்ந்த ஸொஸைட்டிகளின் கணக்கு வழக்குகளைப் பரிசீலனைசெய்தும், புதிய சங்கங்களை ஸ்தாபித்தும் வேலைசெய்து வரவேண்டு மென்பதும் இரண்டாவது

தீர்மானத்தில் அடங்கிய விஷயம். அந்தத் தீர்மானமும் ஒருமனதாய் நிறைவேறியது.

---

### பொது நிதிகளும்
### கோ-ஆபரேடிவ் சங்கங்களும்.

மிஸ்டர் வி. என்: கிருஷ்ணஸ்வாமி அய்யர் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்:—சுகாதாரம், கல்வி பாசனவேலை முதலியவற்றிற்காகச் செலவிடப்படும் பொதுநிதிகளை கோ-ஆபரேடிவ் பஞ்சாயத்து கமிட்டிகளின் வசம் கவர்ன்மெண்டு கொடுத்து செலவிடும்படி சொல்வது அவசியமென்று இந்தக் கான்பரென்ஸ் தீர்மானிக்கின்றது.

இவ்விஷயமாய் மிஸ்டர் கிருஷ்ணசாமி அய்யர் பேசியதில், கவர்ன்மெண்டார், மேற்கண்டவாறு செய்வது அத்திபாவசியமென்பதை விளக்கிக்காட்டினார். கிராம ரஸ்தாக்கள் முதலியன போடுவதில், கவர்ன்மெண்ட் சிப்பந்திகளைவிட பஞ்சாயத்தார்களே அதிக அநுபவத்துடன் குறைந்த செலவில் அதிக சௌகரிய முண்டு பண்ணக் கூடுமாகையால், ஜனங்களின் பொதுவான சௌகரியத்தின் பொருட்டு செலவிடப்படும் பணத்தை, உத்தியோகஸ்தர்கள் சாப்பிட்டு விடாமல், அப்பணமனைத்தும் ஜனங்களுக்கு உபயோகமான வழியில் செலவிடப்படுமாறு செய்வதற்கு, பஞ்சாயத்தார்களிடம், அவ்வேலையை ஒப்படைப்பதே சரியென்று சொன்னார். தீர்மானம் பலரால் ஆமோதிக்கப்பட்டு ஒருமனதாய் நிறைவேறியது.

கோ-ஆபரேடிவ் ஸொஸைட்டிகள், ஒருநபர் மீது பிரியாதுசெய்து டிகிரி வாங்கும்போது, டிகிரிதேதியிலிருந்து அத்தொகைக்கு வட்டியைக்குறிப்பிடுவது கோர்ட்டாரின் சித்தத்தைப் பொறுத்ததாயிருப்பதால் அப்படியிருப்பது கூடாதென்றும், அதனால், ஸொஸைட்டிகள் நஷ்டமடைகின்றனவென்றும், ஆகவே, ஸொஸைட்டிகளுக்கு நஷ்டமுண்டாகா வண்ணம் கோர்ட்டார் வட்டியைக் குறிப்பிட வேண்டுமென்றும் ஒருதீர்மானஞ் செய்யப்பட்டது. அத்துடன் முதல்நாள் கூட்டம் கலைந்தது.

---

### இரண்டாம் நாள் கூட்டம்.

ஞாயிற்றுக்கிழமை காலை 11-மணிக்கு மீண்டும் கான்பரன்ஸ் கூடியதும், கோ-ஆபரேடிவ் ஸொஸைட்டிகளின் சம்பந்தமாய் கவர்ன்மெண்ட் புதிதாய் செய்ய உத்தேசித்து, போர்டு ஸெயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் பிரசுரஞ் செய்திருக்கும் ஒழுங்குகளில் பற்பல திருத்தங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமென்பதைக் காட்டி பல தீர்மானங்கள் செய்யப்பட்டன. அதன்பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் கான்பரன்ஸில் ஒரே மனதாய் நிறைவேற்றப்பட்டன.

---

### "டிரஸ்ட் பண்டு" பணத்தை
### ஐக்கிய சங்கங்களில் போட்டு வைத்தல்.

கோயமுத்தூர் மிஸ்டர் வி. என். கிருஷ்ணசாமி அய்யர் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரணைசெய்தார்:—

டிரஸ்ட் பண்டுகளைச்சேர்ந்த பணம், கோ-ஆபரேடிவ் ஸொஸைட்டிகளில் போட்டு வைக்கப்படலாமென்று நிர்ணயித்து, அதன்படி டிரஸட்பண்ட் ஆக்டைத் திருத்தவேண்டுமென்று இந்தக்கான்பரன்ஸ் தீர்மானிக்கின்றது. அப்படித் திருத்தப்படுகிறவரையில், டிரஸட்பண்டு நிதிகளை ஐக்கிய நாணயச் சங்கங்களில் போட்டு வைக்கலாமென்று ஹைகோர்ட்டார் ஒரு ஒழுங்கு ஏற்படுத்தவேண்டுமென்றும் இந்த கான்பரன்ஸ் தீர்மானிக்கின்றது.

இத்தீர்மானத்தின் சம்பந்தமாய் மிஸ்டர் கிருஷ்ணஸாமி அய்யர் பேசியதில், ஐக்கிய நா

ணயச் சங்கங்கள் பல, பணமின்றி தவிப்பதையும், டிரஸட் நிதிகள், ஐக்கிய நாணயச் சங்கங்களில் வட்டிக்குப்போட்டு வைக்கப்பட ஏற்பாடுசெய்யப்படுமானால் அதனால் உண்டாகக்கூடிய நன்மைகளையும் எடுத்துச் சொன்னார். கிருஷ்ணா ஜில்லாவைச் சேர்ந்த மிஸடர் வி. வி. நரசிம்மம் என்பவரால் ஆமோதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேறியது.

---

## சங்கங்களின் அபிவிருத்தி.

மிஸ்டர் சி. என். ஸ்ரீனிவாசய்யங்கார் பிரேரணை செய்த தீர்மானம்:—

1913-ம் வருஷத்தில் ஐக்கியநாணயச் சங்கங்களின் அபிவிருத்தி அதற்கு முந்தின வருஷத்தை விடக் குறைந்து விட்டதைக் குறித்து இந்த கான்பரென்ஸ் வருத்த முறுகின்றது. புதிதாய் அதிக இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப் பட்டிருப்பதால், இவ்வருஷம் சங்கங்களின் தொகை அதிகரிக்கு மென்று இந்த கான்பரன்ஸ் நம்புகின்றது.

---

## பிரதம கல்விச் சாலைகளில் ஐக்கிய பயிற்சி.

இந்த ராஜதானியிலுள்ள பிரதமப் பள்ளிக்கூடங்களிலெல்லாம், மாணவர்களுக்குச்சொல்லிக் கொடுக்கப்படும் பாடங்களில், ஐக்கியத்தைப் பற்றிய பாடத்தையும், ஒரு பாடமாக சேர்த்து கற்பிக்கும்படி, வித்தியா இலாகா ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த கான்பரன்ஸ் வற்புறுத்துகின்றது.

---

## சங்கங்களும் கவர்ன்மெண்ட் சிப்பந்திகளும்.

35 ரூபாய்க்கு மேற்பட்டு சம்பளம் பெறும் கவர்ன்மெண்ட் சிப்பந்திகள் கோ ஆபரேடிவ் முயற்சியில் சம்பந்தப்படக் கூடா தென்று கவர்ன்மெண்டார் தடை செய்திருப்பதை அகற்றி எல்லா கவர்ன்மெண்ட் சிப்பந்திகளும் ஐக்கிய நாணய நிகழ்ச்சியில் கலந்து கொள்ள கவர்ன்மெண்ட் விடவேண்டு மென்றும் இந்த கான்பரன்ஸ் அபிப்பிராயப் படுகிறது.

---

## விவசாயச் சங்கங்கள்.

விவசாய சம்பந்தமான கோ-ஆபரேடிவ் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டுவதன் சம்பந்தமாய் முதலாவது கான்பரென்ஸில் செய்யப்பட்ட தீர்மானத்தை இந்த கான்பரென்சும் திருப்பச் செய்வதோடு கவர்ன்மெண்ட் பணவுதவி செய்து பால் நெய் விற்கப்படுவதற்கான பண்ணைகளை ஸ்தாபிக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றது.

இந்த தீர்மானத்தை செல்லப்பள்ளி குமாரராஜா பிரேரணை செய்து நீண்டதோர் பேச்சு பேசினார். விவசாயம் அபிவிருத்தி யாவதற்கு ஐக்கிய நிகழ்ச்சி அபிவிருத்தி யடைய வேண்டியது பிரதம அவசிய மென்பதையும் நல்ல பால், நெய், கிடைப்பது அரிதாய் விட்டமையால், சிசுமரணம் அதிகரித்து வருவதையும் பற்றி அவர் விவரித்துச் சொன்னார்.

---

## கட்டாயக் கல்வி.

மிஸ்டர் குருஸ்வாமி சாஸ்திரி கீழ்க்கண்ட தீர்மானத்தை பிரேரணை செய்தார்.—எங்கெங்கே ஐக்கிய சங்கங்கள் வேலைசெய்து வருகின்றனவோ அங்கெல்லாம் அந்தந்த ஸ்தலத்திற்கேற்றவாறு கட்டாயக் கல்விமுறை வழக்கத்துக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்றும்,

அதன் பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டார் தகுந்த சட்டம் செய்ய வேண்டுமென்றும் இந்த கான்பரன்ஸ் தீர்மானிக்கின்றது. இத்தீர்மானத்தை ஆமோதித்துப் பலர் பேசினார்கள். ஒருமனதாய் நிறைவேற்றப் பட்டது.

---

## சென்னை மாகாண கோ-ஆப்ரேடிவ் யூனியன்.

ஆனரெபில் திவான் பகதூர் ஸ்வாமிக்கண்ணுபிள்ளை, சென்னை மாகாண கோ-ஆப்ரேடிவ் யூனியன் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று கடந்த வருஷத்தில், கான்பரன்ஸால் தீர்மானஞ் செய்யப் பட்டபடி, மேற்கண்ட யூனியன் ரிஜிஸ்டர் செய்யப் பட்டதாக கான்பரென்சில தெரிவித்தார். ஒருவருஷகாலம் தாமதிக்க நேரிட்டதைக் குறித்துத் தாம் விசனிப்பதாகவும், ரிஜிஸ்டர் செய்ய மனுச்செய்து கொண்டவர்கள், யூனியன் சங்கத்தின் பொருட்டு வேலை செய்ய ஆரம்பித்ததும், சங்கத்தின் வேலைகள் தொடங்குமென்றும் அவர் தெரிவித்தார்.

திவான்பகதூர் ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை, கோ-ஆபரேடிவ் நிகழ்ச்சியின் அபிவிருத்தியின் பொருட்டுச் செய்துவரும் வேலைகளுக்காக அவருக்கும் கான்பரென்ஸ் நன்றிசெலுத்துவதாக ஒரு தீமானஞ் செய்யப்பட்டது.

வழக்கம்போல அக்கிராசனாதிபதிக்கு வந்தனங்கள் கூறப்பட்டு கான்பரென்சு கலைந்தது.—

---

## தஞ்சாவூர் ஜில்லா ஐக்கிய முயற்சி கான்பரன்ஸ்.

தஞ்சாவூர் ஜில்லா ஐக்கிய முயற்சி கான்பரன்சு அம்மாப்பேட்டை ரயில்வே ஸ்டேஷனுக்கு சமீபத்தில் போடப்பட்டிருந்த பந்தலில் நிகழ்மீ 10௳ கூடினது; ராவ்பகதூர் அண்ணுசாமித் தேவர் அவர்கள் வரவேற்பு கமிட்டிச் சேர்மேனாகவிருந்து வந்திருந்தவர்களை தம்முடைய சொந்தச் செலவில் உபசரித்தார் தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் மிஸ்டர் வுட், ஐ. ஸி. எஸ். சபாநாயகராயிருந்து நீண்ட பிரசங்கஞ் செய்தார். அதின் மொத்த சாராம்சம் என்னவென்றால் ஐக்கிய முயற்சி இந்தியாவிற்குப் புதிதல்லவென்று வெகு காலத்திற்கு முந்தியே அந்தந்த வகுப்பார் சேர்ந்து தங்களுடைய விஷயங்களையும் காரியங்களையும் கவனித்து முன்னுக்குவந்தார்கள், என்றும் இந்தக் காலத்தில் செய்யப்படும் ஐக்கியமுயற்சி ஒவ்வொரு மனிதனும் க்ஷேமப்படுவதற்காகச் செய்யப்பட்டு வருகிறதென்று சொன்னார்.

---